
www.viyukam.com
FEBRUARY 2006
ISSN 1800 - 1521

விலை - 60/=

# வியூகம்



## தென்னிலங்கையின் மற்றுமொரு சமாதான முனைப்பு

## யூரோவிற்காக அமெரிக்காவின் அடுத்த ஆக்கிரமிப்பு



R.R Media Network
Outsourcing Projects
Advertising
Media Consultation
Video and Audio Productions
R.R Media Network
33, Janaki Lane, Colombo 04. Tel 0777 563 891

வணக்கம் !

எங்கள் சமாதானக் கதவு மீண்டும் ஜெனீவாவில் தட்டப்படுகிறது. காலம்காலமாக நாம் தட்டும் அதே பழைய கதவுதான். தட்டினால் திறப்பதற்கு உள்ளே ஆண்டவர்கள் (ஆள்பவர்கள் ?) காத்திருக்கவில்லை என்பதை நாம் அறிவோம். ஆனாலும் தேவைகளோடும்! நம்பிக்கைகளோடும் அதே கதவு மீண்டும் தட்டப்படுகிறது. பள்ளியெழுச்சி பாடிய தந்தையர் காலங்கள் தாண்டி இன்று முட்டித் திறக்கத் தெரிந்தவர்கள், தட்டிப்பார்க்கும் அடுத்தகட்ட நிகழ்வின் ஆரம்பம் இது. தாயகத்தின் உள்ளும் புறமுமாய் லட்சோபலட்சம் பேர் நம்பிக்கைகளோடும் கனவுகளோடும், இன்றும் இன்னும் காத்திருக்கிறார்கள்.

விடிவு என்பது சூரியன் வருவதால் என்றுதான் நம்பினோம். இப்போதோ இருள் கவிவதாலும் தான் என்று நம்புகிறோம். கதவுகளை எப்படித் தட்டுகிறோம் என்பதில் அவதானம் கொள்ளும் பலர், கதவின் உள்ளே இருப்பது கடவுளா? கல்லா? என்பதில் அதிகம் கவனம் கொள்ளவில்லை. கதவுகள் காலம் காலமாகத் தட்டப்பட்டாலும், இருண்ட நேரத்தில் அரச வசந்த மண்டபத்தில் மாறிவரும் தூங்கும் தெய்வங்களின் காதுகள் திறப்பதில்லை.

ஜெனீவா என்னாகும் என்ற கேள்வியோடு நாம் காத்திருக்கிறோம். அங்கே மீண்டும் ஒரு ஆச்சரியக் குறி விழாமல் ஏதேனும் ஒரு கால்புள்ளியாவது கிட்டட்டும்.

ஆசிரியர்




" சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம் எய்தும் பராபரமே"

**பிரதம ஆசிரியர்**
இளையதம்பி தயானந்தா
thaya@viyukam.com

**இணை ஆசிரியர்**
சந்திரசேகரமூர்த்தி ரமணன்
ramanan@viyukam.com

**பதிப்பாசிரியர்**
ரசித்திரா ரமணன்
rajee@viyukam.com

**பிரதம செய்தியாளர்**
கனக வரதன்
varathan@viyukam.com

**பக்க வடிவமைப்பு**
EC Ways (Pvt) Ltd.

**அச்சு பதிப்பு**
E-Kwality Graphics (Pvt) Ltd.
Tel : 011-2389848

**இணையத்தளம்**
www.viyukam.com

**மின்னஞ்சல்**
info@viyukam.com
**முகவரி**
வியூகம்
த.பெ.எண் 1364
கொழும்பு

வியூகம் தொடர்பான உங்கள் எண்ணங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

வியூகம்
த.பெ.எண் 1364
கொழும்பு

# உள்ளே...




சக்தி கொடு! தேவி ................... சக்தி கொடு! 4

திருக்கேதீச்சர ..................... மரபுகளும் ஐதீகங்களும் 13

காதலர்தின சிறப்பிதழ்... 16






அறிவும் உணர்வும் 6



அத்துமீறும் செவிகள் 21

யூரோவிற்காக .. அடுத்த பலிக்கடா தயார்.. 26



வல்லரசின் நெஞ்சில் வளர்த்த கடா.. இஸ்ரேல் – பலஸ்தீனம் 8



என்று தணியும் இந்தக் கோலை மோகம்? 23



வெள்ளித் திரைகளை ஊடறுக்கும் சின்னத் திரைகள் 30



விட்டுக்கொடுப்புகளை விரும்பாத தென்னிலங்கையும் அதன் மற்றுமொரு சமாதான முனைப்பும் 18



நபிகள் நாயகம் தொடர்பாக சர்சைக் குரிய கேலிச்சித்திரம் ஒன்றை டென் மார்க் ஊடகம் வெளியிட்டதற்கு எதிர்புத் தெரிவித்து உலகின் பல நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பலர் உயிரிழுந்திருக்கின்றனர்.








உலகை அச்சுறுத்தி வரும் பறவைக் காச்சல் நோய் இந்தியாவிலும் பரவியிருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சிகள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உலகளாவிய ரீதியல் இந்த நோயின் தாக்கம் காரணமாக இதுவரை 150 பேர் உயிரிழுந்துள்ளனர். மனிதனில் இருந்து மனிதனுக்கு இந்த நோய் தொற்றுமா என்பது இன்றும் தெளிவாகவில்லை நேரடியாக பறவைகளில் இருந்தே மனிதனுக்கு தொற்றுவது கண்டறியப்பட்டுள்ளது.

தென்கிழக்காசிய நாடுகளில் மையம் கொண்டுள்ள இந்த நோய், மேற்கு நாடுகளை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். H5N1 என்ற வைரசே இந்த நோய்க்குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.ஆனாலும் இதற்கான மருந்து இன்னும் கண்டறியப்படவில்லை.





கீரின்லன்ட எனப்படும் பினத் தீவு மிக வேகமாக உருகி வருவதாக தெரிவிக்கப்பட்டள்ளது

அதிகரித்து வரும் பூமியின் வெப்ப நிலை காரணமாகவே இங்குள்ள பனிப் பாறைகள் உருகி வருதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வேகமாக இவை உருகி வருவதால் சமுத்திரங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து வருகின்றது.



கடந்த மாத வியூகத்தின் அட்டைப்பட கட்டுரையில் குறிப்பிடப்பட்ட ஆளில்லா உளவு விமானம் ஒன்று பாகிஸ்தானிய நகரில் நடத்திய தாக்குதலில் அல் கைடாவின் முக்கியஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்

இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் பலரும் கொல்லப்பட்டிருந்தனர். பாகிஸ்தானின் பஜுர் நகரில் அத்துமீறி நுழைந்த அமெரிக்க உளவு விமானம் நடத்திய இந்த தாக்குதலை பாகிஸ்தான் அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இது தமது நாட்டு இறைமையை மீறும் செயல் என பாகிஸ்தான் கண்டனம் வெளியிட்டது.

இந்த தாக்குதலில் அல் கைடாவின் ஒசமா பின்லேடனுக்கு அடுத்த தலைவராக கருதப்படும் அய்மான் அல் சவாகிரியின் உறவினர் ஒருவரே கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய அதிபர் பேர்வஸ் முஸ்ரப் தற்பொது அறிவித்துள்ளார்.



பிலிப்பைன்சில் இடம்பெற்ற மண்சரிவில் நூற்றுக் கணக்காணவர்கள் உயிரிழுந்துள்ளனர்

ஒரு கிராமம் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் அதில் சுமார் 1800 பேர் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடிபாடுகளில் இருந்து சிலர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

# சக்தி கொடு! தேவி சக்தி கொடு!



அசுர வேகத்தில் பொருளாதாரம் வளர்கின்றது. மேற்குலக நாடுகளுடன் பொருந்துமளவிற்கு ஆசிய நாடுகள் சில, பல துறைகளிலும் பாரிய வளர்ச்சி யடைந்துள்ளதைக் காண்கிறோம்.. தொழிற்சாலைகள் பல்கிப்பெருகு கின்றன. வேலை வாய்ப்புகள் அதிகரிக் கின்றன. உலக சந்தையில் இவர்களது உற்பத்திப்பொருட்கள் நிறைகின்றன. குறைந்த ஊதியத்தோடு பணியாட்களை வேலைக்கமர்த்தி, பெரிய அளவில் இலாபம் பெறலாம் என்ற காரணத்தால், இராட்சத நிறுவனங்கள் முதலிட்டு, தமது தொழிற்சாலைகளைக் கட்டியெழுப்புகின்றன.

எல்லாமே மகிழ்ச்சியைத் தரும் விடயங்களாகவே இருக்கின்றன.

ஆனால் இந்த வளர்ச்சிப் பாதையில் தடைக்கற்களும் வந்து சேர்ந்திருக் கின்றன. அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கின்றன.

ஆசிய நாடுகளான சீனாவும் இந்தியா வும் இன்று கண்டுவரும் அசுர வளர்ச்சி பற்றியே இங்கு பேச வருகின்றோம்.

இந்த இரு நாடுகளும் மேற்கத்திய நாடுகளின் தரத்தை எட்டிப் பிடிக்கும் ஓட்டப் பந்தயத்தில் பெரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றன என்று World Watch என்ற அகில உலகரீதியான அமைப்பு தன் சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த இருநாடுகளும் இந்த ஓட்டத்தில் தண்ணீர் இழப்பை எதிர்நோக்குகின்றன.

விவசாயம் செய்யத் தகுந்த நிலப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றன.

மூன்றாவதாக எரிபொருள் தட்டுப் பாட்டை எதிர்நோக்கும் அபாயம் காத்திருக்கின்றது.

சுருங்கக் கூறுவதானால், இந்த இரு நாடுகளினதும் அகலக் கால் வைத்த பாய்ச்சலுக்குப் போதுமான அளவில், இவர்கள் மண்ணில் வளங்கள் இல்லாத நிலை வந்து சேர்ந்திருக்கின்றது.

இரு குறிப்பிட்ட ஆசிய நாடுகளைப் பற்றி இங்கே சொல்லிக் கொண்டாலும், ஒட்டு மொத்தமாக, இன்று பல துறை களிலும் உலகம் வேகமாக முன்னேறத் துடித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்த உலக நாடுகளுக்கு மிக அதிகமாகவும், அவசியமாகவும் தேவைப்படுவது எரிபொருள் சக்திதான்.

பலவற்றின் இயக்கத்திற்கு உந்துசக்தியாக இருந்துவரும் எரிபொருள், எரிவாயு போன்றனவற்றின் இருப்பு மெல்ல மெல்ல வீழ்ச்சி கண்டு வருவதே இன்றைய வாழ்வின் யதார்த்தமாக இருக்கின்றது.

ஆறு பில்லியனை எட்டிப் பிடிக்கும் உலக ஜனத்தொகையின் தேவைகளும் கணிசமான அளவு அதிகரித்திருக் கின்றன. உடைகளைக் கழுவும் இயந் திரம், சமையலறைப் பாத்திரங்களைக் கழுவும் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி என்று வீடுகள் நவீன இயந்திரங் களால் நிறைந்து போயிருக்கின்றன.

இவற்றையெல்லம் இயக்க மின்சார சக்தி வேண்டும். அளவுக்கு மீறி, பாவனைக்குத் தேவைப்படும் சக்தியை எங்கிருந்துதான் திரட்டுவது?

திணறுகின்றது பூமி.

கடிவாளத்தை அறுத்துக் கொண்டு, காற்றைக் கிழித்தபடி, கண்மூடித் தனமாக, காட்டாற்று வெள்ளம்போல ஓடும் குதிரையால், எப்பொழுதும் அதேபோல ஓடிக்கொண்டிருக்க முடிவ தில்லை. ஏதோவொரு சமயத்தில், எங்கோ முட்டி மோதி, மூச்சிளைக்க, குதிரை தனது ஓட்டத்தை நிறுத்தி யேயாக வேண்டும்.

வேறு வழியில்லை.

இன்றைய நிலையில், மனிதனும் கண் மூடித்தனமாகத்தான் பாய்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றான்.

இவனும் அந்த மூர்க்கமான குதிரையைப் போல, எங்காவது போய் முட்டி மோதி, தன்னை அழித்துக் கொள் ளப்போகின்றானா? அல்லது அதற்கு முன்பாகவே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு நல்ல திட்டத்தை வகுத் துக்கொண்டு விடுவானா?

அப்படி மனிதன், தான் தப்பிக்கொள்ள எதையாவது திட்டமிட முடிந்தாலும், அது அப்படியொன்றும் சுலபமான ஒன்றாக இருக்காது என்பது நிச்சயம். அது மட்டுமல்ல, பெரும் பணத்தை முழுங்கும் பாரிய திட்டங்களே, சாத்தியப்படும் நிலையைக் கொண்டு வந்து சேர்க்கும்.

IEA என்று சுருக்கமாக அழைக் கப்படுவதுதான், உலகரீதியான சக்தி ஏஜென்சியாகும். (Internation Energy Agency).உலகநாடுகளெங்கும் பல்வேறு வழிகளில் பாவனைக்குத் தேவைப்படும்

பல்வேறு சக்திகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனம் இதுவாகும். 2030ம் ஆண்டளவில், இன்றைய தேவைகளை விட மனிதனுக்கு 50 தொடக்கம் 60 வீதம் அதிகமான சக்தி பலதுறைகளில் அவசியப்படும் நிலை வரப்போகின்றது என்று இந்த அமைப்பு ஆருடம் சொல்கின்றது.

எண்ணெய் அளவும் வீழ்ச்சி காணத் தொடங்கி உள்ளது. உள்ள எண்ணெயும் விலையில் எகிறிக் குதிக் கின்றது. சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை, வருட முடிவில் குறிப்பிடத்தக்க அளவு மேலேறி இருக்கின்றது.

இதனைப் பெரிய அளவில் விநியோகித்து வரும் மத்தியகிழக்கு நாடுகளினதும், ரஸ்யாவினதும் அரசியல் தளம்பல் நிலை, மேற்கத்திய நாடுகளுக்கு தலையிடிதரும் விவகாரங் களாகி இருக்கின்றன.

சக்தியை அபரிதமாகத் தரும் நிலக்கரி யின் பக்கம் மனிதன் பார்வை திரும்பு கின்றது. எண்ணெய், எரிவாயு போன்ற வற்றுடன் ஒப்பிடும்போது, நிலக்கரியை மிகக் குறைந்த பணத்தில் மனிதனால் கொள்வனவு செய்யமுடியும். ஆனால் அதை எரிக்கும்போது வெளியேறும் கரும்புகை, சூழலை பெரிய அளவில் பாதித்து வருவதால், கரி ஒரு மலிந்த எரிபொருளாக இருந்தாலும், அது விலக் கப்பட்ட கனியின் நிலையிலேயே இருந்து வருகின்றது.

இருந்தும் இல்லாத நிலை என்று இதை வர்ணிக்கலாமோ?

எரிபொருள் விலை சந்தையில் ஏறிப் பாய்கின்றது.


இந்த எரிபொருள் வளமும் குறைகின்றது.

அதை விநியோகிக்கும் நாடுகளிடையே அரசியல் குழப்பம்.

அப்படியானால் சக்தி கொடு என்று கூக்குரல் போடும் மனிதன், அந்தச் சக் திக்கு எங்கேதான் போவான்?

அணுசக்தி மீது மனிதனின் ஈர்ப்பு முன்னணிக்கு வர ஆரம்பித்துள்ளது.

உலக அணுசக்தி அமைப் பின் அறிக்கையின்படி, உலக ளாவியரீதியாக, வர்த்தக நோக்குடன் இயங்கும் 440 அணுசக்தி ஆலைகள் இருக்கின்றன. இவை மின்சார



உற்பத்தியை மேற் கொள்கின்றன. உலகின் 16 வீதமான மின்சாரத் தேவையை இவை பூர்த்தி செய்வது, குறிப்பிடத்தக்க ஒரு விடயந் தான். இந்தியா, சீனா போன்ற முக்கிய அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு, இந்த அணுசக்தி பேருதவியாக இருப்ப தோடு, இராணுவத்தின் பல திட்டங்க ளின் செயற்பாடுகளுக்கும், உறுதுணை யாக இருந்துவருகின்றன.

ஆனால் இங்கேயும் இடையூறுகள் இருக்கவே செய்கின்றன.

இந்த அணுசக்தி உற்பத்தியில் சேரும் கழிவுகள் அச்சுறுத்தலுக்கு உரியதாக இருக்கின்றன. அணுசக்திக்கான மூல இரசா யணப் பொருளான யுரேனியத்தின் கையி ருப்பு மெச்சத்தக்க விதத்தில் இல்லை. இதனால் ஐரோப்பிய நாடுகள், ஜாக்கிர தையோடு, இந்த அணுசக்தியைக் கையாள்வதைத் தவிர்த்து வருகின்றன.

இன்று நம் பாவனையிலுள்ள அதிக மான சக்தி, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சூரியனிடமிருந்தே வருகின்றது. சூரியனே காற்றோட்டத்தை பாதிக்கவைத்து, வருணபகவானை பூமி க்கு அழைத்து தண்ணீரின் பெரும் சக் தியை மனிதனுக்குத் தருகின்றது. சூரிய வெப்பத்தின் தாக்கத்தில்தான், மரங்க ளும் செடிகளும்கருகி, பின்பு புதைந்து, பல நூறு வருடங்களின் பின்பு எண் ணெய் நிலக்கரி என்று மாறி சக்தி கொடுக்கும் மூலவளங்களாகின்றன.

இப்படி மறைமுகமாக சூரிய சக்தியின் பயனைப் பெற்ற நமக்கு இப்பொழுது நேரடியாகவே அதன் சக்தியைத் தேடும் வேளை வந்திருக்கின்றது. இதன் செலவு நிலக்கரி, எண்ணெய் போன்றவற்றை விட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கப் போவதும் நிச்சயம். என்றாலும் இந்த வழிமுறையில் மனிதனுக்குச் சக்தி அபரிதமாகக் கிடைக்க, பல வருடங்கள் அவன் காத்திருப்பது அவசியமாகின்றது.

2010ம் ஆண்டளவில், தெருக்களை நிறைக்கும் வாகனங்களில் 7.5 வீதமா னவை, சீனி, மரக்கறி எண்ணெய் போன்றவற்றிலிருந்து உற்பத்தி செய்த எண்ணெய் மூலம் ( இதை Bio oil என்று அழைக்கின்றார்கள்.) இயங்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் முன்னர் அறிவித்தி ருந்தது. இப்பொழுது அது அசாத்தியம் என்கிறது. இந்த எரிபொருள் வெளியேற் றும் கழிவு சூழலைப் பெரிதும் மாசுபடுத் தும் என்று அதன் பாவனைக்கு பெரிய அளவில் எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன.

அப்பன் அருமை மாண்டால் தெரியும். உப்பின் அருமை சமைத்தால் தெரியும் என்று அற்புதமான ஒரு முதுமொழி இருக்கின்றது. ஒன்று இல்லாதபோது, அல்லது இல்லாததாகிவிடுமோ என்ற பயம் நம்மைத் தொற்றிக் கொள்ளும்போது, அடுத்து என்ன செய்வது என்ற குழப்பம் மேலிடுகின்றது. மாற்று நடவடிக்கை தேடி மனம் விழைகின்றது.



சக்தியின்றி மனிதன் இல்லை. அந்தச் சக்தியின் வளம் குன்றுகின்றது. இடை வெளியை நிரப்ப வேண்டாமா?

மனிதன் ஓயப்போவ தில்லை. அவன் தேடல்கள் தொடரத்தான் போகின்றன.






# புத்தியும் நீங்களும்

## EQ விலும் சிறந்து விளங்க வேண்டுமா ?

புத்திக்காரன் எவனும் செப்பமாய் வாழ்ந்ததில்லை. யாரும் கோபப்பட வேண்டாம். புத்திசாலிகளின் வாழ்க்கைச் சரித்திரங்கள் இதைத்தான் சொல்கின்றன. அறிவும் புத்தியும் வேறு வேறு விடயங்கள் என்பதை புரிந்துகொண்டால் கோபம் உங்களுக்கு வராது. திருக்குறளில் கல்விக்கு தனியாகவும் அறிவுடைமைக்கு தனியாகவும் அதிகாரம் படைத்த வள்ளுவனுக்கு தெரிந்த இந்த விடயத்தை இப்போது அறிவியல் தேட ஆரம்பித்திருக்கிறது.

உலகில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் தனது மிகுதியான அறிவுத்திறனால் (Intelligence) சிறந்து விளங்கியவர்கள் கூட மனவெழுச்சி அறிவின் (Emotional Intelligence) திறனில் கவனம் செலுத்தாததால் தங்கள் துறையிலும், சொந்த வாழ்க்கையிலும் மனம் நொந்தவர்களாக பல இன்னல்களை சந்தித்துள்ளனர். இதற்கு காரணம் மனவெழுச்சித் திறனில் (Emotional Quotient) கவனம் செலுத்தாததுதான் என்கிறார் சென்னைப் பல்கலைக் கழகத்தின் உளவியல் பேராசிரியர் வி.டி.எஸ்.சுவாமிநாதன்.

தொடக்கத்தில் வாழ்வின் வெற்றிக்கு அறிவுத்திறன் அளவே காரணமாக கருதப்பட்டது. ஆனால் தற்போது வாழ்வின் வெற்றிக்கு அறிவுத்திறனின் அளவு 20சதவீதமும், மனவெழுச்சி அறிவின் திறனின் அளவு 80 சதவீதமாகவும் இருத்தல் வேண்டும் என ஆய்வுகள் கூறத் தொடங்கியுள்ளன.

அமெரிக்காவின் உளவியல் அறிஞர் டானியல் கோல்மென் 1995ல் மனவெழுச்சி அறிவின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். அவரைத் தொடர்ந்து ஜான் மேயர், க்ளன் கெஹர், ஸ்டீவ் ஹெய்ன் போன்ற உளவியல் அறிஞர்கள் மனவெழுச்சியறிவு குறித்து ஆய்வு செய்து புத்தகங்களாக வெளியிட்டனர்.

மனவெழுச்சித் திறன் குறித்தும், அதன் அவசியம் குறித்தும் உளவியல் பேராசிரியர் வி.டி.எஸ்.சுவாமிநாதனைக் கேட்ட போது, "மனவெழுச்சி திறன் என்பது உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டதும், நம் உணர்வுகளுடன் பிறரின் உணர்வுகளையும் புரிந்துகொண்டு செயற்படுவதேயாகும் எனத் தெரிவித்துள்ளார்.

சுய விழிப்புணர்வு, மனதை அடக்கியாளுதல், அதை நிர்வகித்தல் போன்ற நம்முடைய உணர்வுகளையும், மன நிலையையும் சார்ந்த அறிவே மனவெழுச்சியறிவு ஆகும். அறிவுத்திறனுடன் மனவெழுச்சித் திறனும் சமநிலையில் இருந்தால் மட்டுமே வாழ்வில் வெற்றியையும், நிறைவையும் அடைய முடியும்.

IQ Level அதிகமாக இருந்து, EQ Level குறைவாக இருந்தால் ஒருவர் எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவரது துறையிலும், சொந்த வாழ்க்கையிலும் முழுமை பெற இயலாது.

IQவின் மீதே கவனம் செலுத்தினால் ஆபரேஷன் சக்ஸஸ் பேஷண்ட் டெட்" என்ற கதையாகிவிடும் எங்கள் வாழ்க்கை. தற்போது IQ விற்கு சமமாக அல்லது மேலாக EQ கருதப்படுகிறது.

விரைவாக வளர்ச்சி பெற்றுவரும் தொழில்நுட்பத்துறைக்கு இது மிகவும் அவசியம். IQ அளவு பயன்படுத்தப்படும் துறைகளில் போதுமான அளவு EQ ஐ சமநிலைப்படுத்தி மன அழுத்தம் (Stress) போன்ற எதிர்மறை விளைவுகளிலிருந்து விடுவித்துக் கொள்ளமுடியும் என நிபுணர்கள் கூறுகிறார்கள்.

கல்விச் சாலைகளின் கவனம் அனைத்துமே பெருமளவில் IQ மீதே மையம் கொண்டுள்ளது. EQ என்பதான மனவெழுச்சி மேம்பாட்டின் எண்ணப்பாட்டோடு எமது பாடநெறிகள் வடிவமைக்கப்படவில்லை. EQவை வளர்ப்பதில் பாடசாலைகளைவிட வாழும் சூழலே மேலாதிக்கம் கொண்டது என ஆய்வுகள் கூறுகின்றன. அடுத்த தலைமுறையின் EQ மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்த



வேண்டியவர்கள் பெற்றோர்.

முதலில் பெற்றோர்கள் EQவில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும். சிறுவர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால் அவர்களைத் திட்டுவதோ, அடிப்பதோ கூடாது. அவர்கள் போக்கிலேயே சென்று வழிநடத்திச் செல்ல வேண்டும். பொறுமை, பணிவு, ஒழுக்கம் போன்ற நல்ல குணங்கள் குறித்து அறிவுரை செய்வதை விட்டு விட்டு நற்குணங்களை பெற்றோரே கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் குழந்தைகள், பெற் றோரைப் பின்பற்றி சிறந்த குணங் களைப் பெறுவர். நம் செயல்களால் ஏற் படும் எதிர்மறையான விளைவுகளைக் கூட சாதகமாக எடுத்துக்கொள்ளும் அளவிற்கு சிறிய வயதிலிருந்தே பிள்ளைகள் பக்குவப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வகையில் மாணவர்களிடம் EQ வில் மாற்றம் உண்டாகினால் ஐ.க்யூவில் சிறந்து விளங்கும் மாணவர்களை IQவிலும் சமநிலைப்படுத்த முடியும். மேலும் IQவில் அதிகம் வெற்றி பெறாத மாணவர்கள் கூட EQவில் ஏற்படும் உயர்வால் சிறந்து விளங்க முடியும்.

எளிமையாக சொல்ல வேண்டுமானால் நம்முடைய உணர்வுகளையும் மனநிலையையும் துல்லியமாய் புரிந்துகொள்வதுடன் நம்மை சுற்றியுள்ள அனைவரின் உணர்வுளையும் புரிந்து கொண்டு எவரையும் பாதிக்காதவண்ணம் ஒவ் வொரு செயலையும் செய்வதற்கு நாம் தயார் செய்து கொள்ளவேண்டும்.

EQவில் சிறந்து விளங்கிய பின் "மனிதம்" என்ற சொல் ஒன்றையே குறிக்கோளாக கொண்டிருந்த அன்னை தெரேசா அடைந்த உன்னதநிலையான SQவை (Spiritual Quotient) அடைய முயற்சி செய்யலாம் எனக் கூறுகிறார் பேராசிரியர் சுவாமிநாதன்.


உளவியல் அறிஞர்கள் கூறுவது போல சுய விழிப்புணர்வு, மன நிலை யை எதிர்மறை எண்ணங்களை விடுத்து தன்னைத்தானே உந்திச் செல்லுதல், பிறரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது போன்ற மனவெழுச்சி அறிவின் உயர்வுக்குத் துணைபுரிவனவற்றை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க முயற்சி செய் தால் தனிமனித வாழ்வுடன், சமுதாயம் வன்முறை, பலாத்காரம், தீவிரவாதம் போன்ற எதிர்மறை வினைகள் இன்றி அமைதியாயிருக்க முடியும்.

EQ வை உயர்த்த உளவியல் அறிஞர் ஸ்டீவ் ஹெய்னின் சில வழிமுறைகளும், பாமரனின் மாற்றுச் சிந்தனையும்...

- **நமது உணர்வுகளை தெளிவாகவும், நேரடியாகவும் வெளிப்படுத்தல்.**
  **உதாரணம் : நான் கோபத்துடன் இருக்கிறேன்.**
  **நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.**
  **இதற்கு மாறாக "நான் கோபத்துடன் இருப்பதுபோல் உணர்கிறேன்". "நீ எனக்கு கோபத்தை உண்டாக்குகிறாய்" என்ற சொற்களைப் பயன்படுத்தாது இருத்தல்.**
  *வைச்சாக் குடுமி அடிச்சா மொட்டை.*
- **நம் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் பயமோ, அச்சமோ இல்லாதிருத்தல்.**
  *இப்படியான EQ ஆற்றல் பெற்ற பலரின் வாழ்விடம் சிறையாகத்தான் இருக்கிறது.*
- **பயம், கவலை, குற்ற உணர்வு, வெட்கம், ஏமாற்றம், நம்பிக்கையின்மை, ஆற்றலின்மை, சார்ந்திருந்தல், துணிவின்மை போன்ற எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுப்பதைத் தவிர்த்தல்.**
  *தவிர்க்கலாம், பிறகு எங்களைத் தவிர்க்காமல் மற்றவனைத் திருத்துவது எப்படி?*
- **பிறரின் வார்த்தைகளுக்கு (Verbal) மட்டுமன்றி அவர்களின் செய்கைகளின் மொழியையும் (Non verbal communication) தெரிந்து வைத்தல்.**
  *காதலர்கள் இதில் அதிக கவனம் செலுத்தவும்*
- **வாழ்வை உணர்வுகளால் வழிநடத்தல்.**
  *18 வயதுவரைக்கும் பலர் அதைத்தான் செய்கிறார்கள்.*
- **காரணங்கள், மாறாத நியதி மற்றும் உண்மைநிலை ஆகியவற்றுடன் உணர்வுகளை சமநிலைப்படுத்துதல் வேண்டும்.**
  *சமப்படுத்தலாம் முதலில் உண்மைநிலைகளைக் கண்டறியவேண்டுமே.*
- **கடமை, நிர்ப்பந்தத்தால் அல்லாமல் விருப்பத்தின் காரணமாக எந்த செயலையும் செய்யவேண்டும்.**
  *இது குடும்பத்தை குலைக்கிற ஆலோசனை.*
- **சுதந்திரமாகவும், சுயசார்புடனும், தனித்தும் விளங்க வேண்டும்.**
  *வியூகத்தைப்போல.*
- **எந்தவொரு செயலையும் அதிகாரம், பணம், தகுதி, புகழ், அங்கீகாரம் போன்றவற்றின் நோக்கத்துடன் அல்லாமல் மனப்பூர்வமாக செய்தல்வேண்டும்.**
  *முடியாத விஷயம்.*
- **மனவெழுச்சியில் விரிவாக்கம் கொண்டிருத்தல்.**
  *முதலில் திறக்கலாம் பிறகு விரிக்கலாம்.*
- **தோல்வியால் சோர்ந்திராத நேர்மறை எண்ணங்களுடன் இருத்தல்.**
  *தசாப்தங்கள் மூன்று தாண்டி அப்படித்தான் இருக்கின்றோம்*
- **நம்மை சுற்றியிருப்பவர்களின் பல்வகைப்பட்ட உணர்வுகளை அறிந்திருப்பதோடு, அதற்கு மதிப்பளிக்கவும் செய்தல்.**
  *இருட்டில் கூடவா?*
- **உணர்வுகளைப் பற்றி பேசும்போது மகிழ்ச்சியுடன் இருத்தல்.**
  *இது பேசுபவருக்கானதல்ல, கேட்பவர் மனநிலை பற்றிய ஆலோசனையாகக் கொள்க.*

பலஸ்தீன அதிகாரசபையின் இரண்டாவது பொதுத் தேர்தலில் ஹமாஸ் எனப்படும் பலஸ்தீனப் போராளி அமைப்பு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. அதை அடுத்துப் பலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றிய பெரும் ஜயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஹமாஸ் இஸ்ரேலை அங்கீகரிக்க மறுக்கும் ஒரு அமைப்பு என்பதும், அது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட மறுக்கிறது என்பதும், அதற்கு ஒரு முஸ்லிம் அடையாளம் உள்ளது என்பதுமே இந்த விதமான ஜயங்கள் எழுப்பப்பட முக்கிய காரணங்களாக உள்ளன.

உலகம் ஒரு விடுதலை இயக்கம் பற்றி உருவாக்கும் அபிப்பிராயமானது, அவ்வியக்கம் எத்தகையது என்பதைவிட எவருடைய நலன்களுக்கு மிரட்டலாக அமைகிறது என்பதிலேயே தங்கியுள்ளது. சுதந்திரமான ஊடக நிறுவனங்கள் என உலகில் எதுவும் இல்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது. ஏனெனில் ஊடகங்களின் செயற்பாடு அரசின் குறுக்கீட்டிற்கும் வணிக நிறுவனங்களது ஆதரவிற்கும் உட்பட்டே நடைபெறுகிறது. ஊடகங்கள் தமது நம்பகத்தன்மையைப் பேண வேண்டி ஒரு நடுநிலைத் தோற்றங்காட்டினாலும், ஆழ நோக்கினால், குறிப்பிட்ட சில அரசியல், பொருளாதார நலன்களாலேயே அவை வழிநடத்தப்படுவதை நாம் காணலாம். கடந்த சில ஆண்டுகளில் ஈராக் மீதான அமெரிக்கப் போர் உட்பட்ட பல விடயங்களில் ஊடகங்களின் பக்கச்சார்பு தெட்டத்தெளிவாக வெளிப்பட்டதைப் பலரும் அறிவோம். அண்மைக்காலமாக அல் ஜஸீரா எனப்படும் அரபுச் செய்தி ஊடகம் அல் கைடாவினதும் ஒசாமா பின் லேடனதும் அறிக்கைகளை வெளியிட்டுப் பிரபலம் பெற்றது. எனினும் அரபு நாடுகளின் விடயத்திலும் ஈரான் விடயத்திலும், அல் ஜஸீரா முரண்பாடுகளின் பல தரப்புக்களையும் பிற ஊடகங்களை விடவும் சிறப்பாக ஒப்பிடத்தக்களவு கனத்துடன், வழங்கியுள்ளதாகக் கூறலாம்.



நன்றி: www.Cartoonstock.com

# வளர்த்த கடா !
# மீண்டும் வல்லரசின் மார்பில் பாய்கின்றது ...

நம்மை வந்தடையும் தகவல்கள் அமெரிக்க, ஐரோப்பிய அரசாங்கங் களின் நலன் சார்ந்து இயங்கும் ஊடகங்களால் வழிகாட்டப்பட்டே வெளி வருகின்றன. அவை உள்ளூர்ச் செய்தி அதிகார நிறுவனங்களால் மேலும் வழிகாட்டப்பட்டு இங்கு ஒலி, ஒளிபரப்பப்படவும் அச்சிடப்படவும் நேருகிறது. எனவே ஹமாஸ் பற்றி அறிய வேண்டுமாயின் இடையிலேயே வெளி வரும் சில ஆய்வுக்கட்டுரைகளையும் சில இணையத் தளங்களையும் இடது சாரிச் சஞ்சிகைகளையும் பார்க்க வேண்டியுள்ளது.

ஹமாஸ் பற்றிய சில படிமங்களை முதலில் கவனிக்க வேண்டும், ஹமாஸ் ஒரு பயங்கரவாத இயக்கம் என்பது ஒன்று. ஹமாஸ் இஸ்ரேலை அழிக்க உறுதிபூண்டுள்ளது என்பது இன்னொன்று. அது ஒரு தீவிர முஸ்லிம் அடிப்படைவாத இயக்கம் என்பது மூன்றாவது. இந்தப் படிமங்கள் ஹமாஸை நாம் எந்தக் கோணத்திலிருந்து நோக்குகிறோம் என்பதைப் பொறுத்தே நமக்கு ஏற்புடையதாக இல்லாமல் போகலாம்.

ஹமாஸ் என்பது பபயங்கரவாத இயக்கம் என்போர் இஸ்ரேலிய அரச பயங்கரவாதம் பற்றிப் பேசுவதில்லை. கடந்த இருபதாண்டுகளை எடுத்தக் கொண்டாற்கூட, இஸ்ரேலிய பொலிசும்

ஆயுதப் படைகளும் பலஸ்தீன மக்களிடையே இயங்குகிற அதன் கூலிப்படைகளும் ஏவலாட்களும் ஏற்படுத்திய உயிர்ச்சேதம், உடற்சேதம், பொருட்சேதம் என்பன ஹமாஸ் உட்பட்ட சகல பலஸ்தீன ஆயுதப்போராட்டக் குழுக்கள் பொதுமக்களுக்கு ஏற்படுத்திய சேதத்தைவிடப் பன்மடங்கு குறைவானவையே. இஸ்ரேலிய நிலப்பறிப்பு. இராணுவத்தின் இருப்பு மற்றும் செயற்பாடு, பொருளாதாரக் கட்டுப்பாடு, ஆதிக்கம் என்பன காரணமாக, 1948 முதலாகவும் குறிப்பாக 1967க்குப் பின்பும் பலவீனமடைந்துள்ள ஒரு தேசத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் கொடியது. அவற்றின் விளைவை (இஸ்ரேலின் எந்த இழப்பிற்கும் மேலாக அதற்கு இழப்பீடு தரவல்ல ஒரு பெரு வல்லரசுள்ள அமெரிக்காவின் ஆதரவின் பின்னணியில்) விடுதலைப் போராளிகளின் தாக்குதல்களின் விளைவுடன் நாம் ஒப்பிட இயலாது.

ஹமாஸ் ஒரு போராளி இயக்கமாக உருவாவதில் இஸ்ரேலின் தொடக்கக் காலப்பகுதி ஒன்று இருந்தது பற்றிப் பலரும் அறியமாட்டார்கள். அது பற்றி எவரும் பேசுவதில்லை. 1970களில் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குச் சர்வதேச அங்கீகாரம் கிட்டியபோதிலிருந்தே, இஸ்ரேல் தனது உள்ளிருந்து குழிபறிக்கும் சதிவேலைகளை மும்முரப்படுத்தியது. 1982இல் லெபனானில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய குரூரமான படுகொலைகளின் பின்பு அரபாத் தலைமையின் மீது பலஸ்தீன அகதிகளது நம்பிக்கை ஆட்டங்கண்டது. இச்சூழலில் அரபாத்தின் தலைமையிலான அல் ஃபதாஹ் அமைப்பிற்கு மாற்றான போராட்டக்குழுக்கள் முனைப்படைந்தன.

இத்தகைய சூழலில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செல்வாக்கை சரிப்பதற் கான மற்றுமோர் ஆயுதமாக 1988களில் உருவான ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் ஊக்குவித்தது. பிற முக்கிய பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் போலல்லாது ஹமாஸ் முஸ்லிம் அடையாளத்தைக் கொண்டிருந்தது. 1980களின் தொடக்கத்திலிருந்து இஸ்ரேலின் அமைப்பாக லெபனானில் இருந்த மொரோன் என்ற கிறிஸ்துவத் துணைப் படைகளது பலஸ்தீன விரோத வன்முறைகளைக் கட்டவிழ்த்தது. இது கிறிஸ்தவ அரேபியர்கட்கெதிரான கசப்புணர்வை வளர்க்க உதவியது.



அதன் விளைவாக இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் வலிமை பெற்றனர். இவர்கள் மத்தியிலிருந்தே ஹமாஸ் உருவானது. ஈரானில் க்ஹொமெய் னியின் ஆட்சியின் தோற்றமும் ஹமாசுக்கு ஊக்கமளித்தது. ஹமாஸ் வெறுமனே ஒரு இஸ்லாமிய அடிப்ப டைவாத இயக்கமாக அமையவில்லை. அதன் தெளிவான மதப்பழமைவாத அடையாளம் பலஸ்தீன விடுதலை இயக்கங்களின் மதச்சார்பின்மைக்கு மாற்றான ஒன்றாக இருந்தமையை இஸ்ரேலிய அதிகாரம் விரும்பியது. ஏனெனில் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு மதச்சார்பான அடை யாளம் அமைவது பலஸ்தீன விடுதலையின் அடையாளத்தை யூத முஸ்லிம் பெரும்பான்மை இல்லாத நாடுகளில் இருந்தும் பலஸ்தீன விடுதலைக்கான ஆதரவைப் பலவீனப்படுத்தும் என்பது இஸ்ரேலியக் கணிப்பாக இருந்தது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை, பலஸ்தீன மக்களின் போராட்டம் பயங் கரவாதமாக அடையாளப்படுத்தப்படும் வரை, பலஸ்தீனத்தில் தனது ஆக்கிரமிப்பைத் தொடர முடிந்தது. பலஸ்தீன மண்ணின் வளமான பகுதிகளிலிருந்து ஜெருசலேம் நகரின் முஸ்லிம் பெரும்பான்மையுடைய கிழக்கு ஜெருசலேம் பகுதியிலிருந்தும் முஸ்லிம்களை விரட்டி யூதமயமாக்குகிற காரியத்தை இஸ்ரேலின் பாதுகாப்பின் பேரில் செய்யமுடிந்தது. அங்கெல்லாம் இராணுவ முகாம்களை நிறுவவும் ஒரு தார்மிக நியாயப்படுத்தலை வழங்க முடிந்தது. இஸ்ரேலுக்கு எதிரான தனது ஆயுதப் போராட்டத்தின் மூலம் பலஸ்தீன விடுதலை இயக்கத்தால் பலஸ்தீன மக்களையோ பலஸ்தீன மண்ணையோ காக்க இயலாத ஒரு சூழ்நிலை ஏற் பட்டது. பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமை மக்களிடமிருந்து கணிசமான அளவுக்கு அந்நியப்பட இன்னுமொரு காரணம். அத்தலைமை கணிசமான அளவுக்கு பணக்கார அரபு நாடுகளின்



உதவியில் தங்கியிருந்தமை எனலாம். இச் சூழலியேயே பலஸ்தீன மக்களது "இன்ற்றிஃபாடா" எழுச்சி 1988இல் நிகழ்ந்தது.

பெண்களும் முதியோரும் குழந்தைகளும் இஸ்ரேலியப் பதுகாப்புப் படைகட்கு எதிராகத் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இராணுவக் கவசவாகனங்கள் மீது சிறுவர்கள் கல்லெறிந்தனர். அதற்கெதிராக இஸ்ரேலியப் படைகள் கடும் நடவடிக்கைகளை எடுத்தது. இஸ்ரேலிய அடக்குமுறையின் உண்மையான வடிவத்தை உலகுக்குக்காட்டியது. இந்தச் சூழ்நிலையிலேயே இஸ்ரேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் முதல் முதலாக முழுமையான அமைதிப் பேச்சுவார்த்தைகட்கு இணங்கியது. இந்த இணக்கம் நேர்மையானதல்ல.

அமைதிக்காக மண் என்ற பேரில் பலஸ்தீன மக்களிடமிருந்து பறித்த மண்ணில் ஒரு பகுதியை நீண்ட காலத்திட்டமொன்றின் பேரில் மீள அளிப்பதற்கு இஸ்ரேல் முன்வந்தது. அதற்கு மாற்றாக பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் எனவும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமெனவும் ஏற்கப்பட்டது. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகள் பலஸ்தீனத்திலிருந்து 1947முதலாக வெளியேற்றப்பட்டு வந்த பலஸ்தீனர்கள் தமது மண்ணுக்குத் திரும்பி வருவதற்கான உரிமையை வற்புறுத்தத் தவறியமை பலஸ்தீன மக்களிடையே அவநம்பிக்கையை உருவாக்கியது. பலஸ்தீன மண்ணின் மீதான இஸ்ரேலிய ஆதிக்கம் தொடர்ந்தது. இஸ்ரேலிய இராணுவக் கெடுபிடிகள்



தொடர்ந்தன உடன்படிக்கையின் பல்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்தாமல் இஸ்ரேல் வேண்டுமென்றே இழுத்தடித்தது. பலஸ்தீன மக்களின் வாழ்க்கையின் நிலைமைகள் மேலும் மேலும் மோசமாகின. அத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே ஹமாஸ் ஒரு வலுவான அரசியல் சக்தியாகத் தன்னை நிலை நிறுத்த முடியுமாயிற்று.

ஹமாஸ் இயக்கத்திற்கு ஈரானின் ஆதரவு தொடர்ச்சியாக இருந்து வந்துள் ளது. எனினும் ஹமாஸின் வளர்ச்சியின் முக்கியமான ஒரு அடிப்படை, பலஸ்தீன மக்கள் மத்தியில் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் உண்மையில் எதையுமே பெற இயலவில்லை என்ற விரக்தியாகும். அதைவிட நீண்டகாலப் போராட்டத்தின் பின்பும் இரண்டாவது இன்ற்றிஃபாடாவின் பின்பும், இஸ்ரேலின் அனுமதியின்றி எதையுமே செய்ய இயலாத ஒரு அமைப்பாகவே இருந்து வந்தது. இந்த அமைப்பின் அதிகாரம் பலஸ்தீனத்தின் மேற்கில் மத்தியதரைக்கடலோரம் அமைந்த காஸா நிலப்பரப்பிற்கும் இஸ்ரேலால் அதனின்று பிரிக்கப்பட்டுள்ள மேற்குக்கரைப் பகுதி எனும் நிலப்பரப்பின் சிறு சிறு துண்டு நிலங்கட்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பலஸ்தீன நிருவாகம் உருவாக்கப்பட்ட பின்பு இஸ்ரேல் தனது யூதக் குடியேற்றங்களை இஸ்ரேலினுள் இணைக்கும் படியான ஒரு நீண்டபெருஞ்சுவரை மேற்குக்கரைப்பகுதியினூடாகக் கட்டியெழுப்பியது. இது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிபோதும், இஸ்ரேல் இச் சுவரைத் தொடர்ந்தும் கட்டியது.

பலஸ்தீன நிருவாகத்தின் தலைமை தனது ஆளுமைக்குட்பட்டதாகச் சொல்லப்படுகிற பகுதிகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குப் போவதற்கு இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதிகளூடாகப் பயணமாக வேண்டும். பல சமயங்களில் இஸ்ரேல் இவ்வாறான பயணங்கட்குத் தடை விதித்துள்ளது. குறிப்பாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரஃபாத்தின் போக்குவரத்து தடை விதித்திருந்தமையை குறிப்பிடலாம். காஸாவில் அமைந் திருந்த அவருடைய அலுவலகம் ஒரு வருடத்திற்கும் மேலாக இஸ்ரேலிய முற்றுகைக்குட்பட்டிருந்தது அதற்கும் மேலாக அக்கட்டிடம் அக்காலப்ப பான

**சபதம்**

எப்படிப் பாடுவோம்?
அந்நியனின் கால்கள்
எங்கள் நெஞ்சின் மேல்
பதியும் பொழுது
எப்படிப் பாடுவோம்?

பனிக்குளிரில் விறைத்து நிற்கும்
பச்சைப் புற் சதுக்கங்கள்
மரித்தோர் சடலங்கள் மத்தியில்
எப்படிப் பாடுவோம்?
குட்டியாட்டுக் கதறல் தொனிக்கும்
பச்சைப் பாலரின் புலம்பல்
தந்திக் கம்பத்தில் அறைந்து கிடக்கும்
தனயனைத் தேடும் தாயின்
கரிய ஓலம்
கேட்கும் நாங்கள்
எப்படிப் பாடுவோம்?

மரக்கிளைகளில் தூக்கிவிட்ட
கின்னரங்களைத் தொடவேயில்லை
இது எங்கள் சபதம்
சோகம் நிறைந்த காற்றில் மெதுவாய்
கின்னரங்கள் ஆடின

எப்படிப் பாடுவோம்?

[சால்வடோர் குவாஸிமோடோவின் இத்தாலியக் கவிதை. ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழில்: நிர்மலா நித்தியானந்தன்.]

நன்றி அலை 21 (1982)

குதியில் இஸ்ரேலியக் குண்டுவீச்சுக்கும் இலக்காகியது.

அரஃபத்தை ஒரு இயக்கத் தலைவர் என்றளவிலும், ஒரு தனிமனிதர் என்றள விலும் இஸ்ரேல் இழிவுபடுத்த ஒரு முக்கிய காரணம் அவரும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் பலஸ்தீன மக்க ளது போராட்ட உணர்வின் அடையா ளமாகக் காணப்பட்டதுதான். இஸ்ரேலின் கடும் நடவடிக்கைகளின் விளைவாகவும் அதற்கு எதிர்வினையாகவும் பலவாறான தாக்குதல்கள் ஹமாஸ் உட்பட்ட அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட் டுள்ளன. எந்த விதமான நியாயப்ப டுத்தலும் இல்லாமலே இஸ்ரேலிய உளவு நிறுவனமும் இராணுவமும் ஹமா ஸின் பல வேறு தலைவர்களைக் கொன் றுள்ளனர். எனவே பலஸ்தீன மக்களின் எந்தவிதமான எதிர்ப்பையும் பலஸ்தீனப் போராளிகளின் எந்தவிதமான தாக்குத லையும் முன்னிறுத்தி, இஸ்ரேல் மிகவும் பயங்கரமான தாக்குதல்களை நடத்திய தில் வியப்பேதும் இல்லை.

பலஸ்தீன அதிகாரசபையின் முதலாவது பொதுத் தேர்தல் அரஃபத் உயிரோடு இருந்தபோது நடந்தது. ஏற்கனவே பலஸ்தீன அதிகாரசபையின் அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றியும் ஊழல் பற்றியும் கடுமையான குற்றச் சாட்டுக்கள் பலஸ்தீனத்திற்குள்ளும் வெளியிலும் இருந்துவந்துள்ளன. பலஸ் தீன அதிகாரசபையின் பாதுகாப்புப் பிரிவினரது அடாவடித்தனம் பற்றியும் கடுமையான குற்றச்சாட்டுக்கள் இருந்து வந்துள்ளன. அரஃபத்துக்கு நெருக்கமா னவர்களது நலன்பேண அவர்களது அரசியல் எதிரிகள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, இஸ்ரேலின் நெருக்குவாரங்கட்குக் கீழ் பயங்கரவாதிகள் மீது கடும் நவடிக்கை எடுக்குமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட் டனர். எனினும் இது அவர்கட்கு இயலுமாயிருக்கவில்லை. ஏனெனில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தினுள் ளும் இஸ்ரேலின் அடாவடித்தனத்திற்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. அத்துடன் ஆயு தபாணிகளான போராளிகளை எதிர்த்து முறியடிப்பது ஊழல்மிக்க ஒரு பாதுகாப் புப் பிரிவுக்கு எளிதான காரியமல்ல.

அரஃபாத்தின் சாவின் பின்பு பலஸ்தீன நிருவாகசபையின் தலைவராகத் தேர் தல் மூலம் தெரிவான பலஸ்தீன வீடு தலை இயக்க வேட்பாளரான மஹ்மூத் அபாஸ் (அபுயாஸின்), அரஃபாத்தைவிட இஸ்ரேலுக்கு ஏற்புடையவராகவும் அமெ ரிக்கா இழுத்த இழப்புக்கு பலஸ்தீன மக்களின் கொதிப்புணர்வுக்கு எதிராக எதுவுமே செய்ய இயலவில்லை. பலஸ் தீன மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னிலும் முனைப்புப் பெற்றன. ஹமா ஸின் செல்வாக்கு மேலும் வளர்ந்தது. இந்தப் பின்னணியிலேயே எவ்வாறு முன்பு தென்லெபனானிலிருந்து இஸ் ரேல் தலைக்குனிவுடன் வெளியேற நேர்ந்ததோ அவ்வாறே காஸாவிலிருந்தும் இஸ்ரேலியக் குடியேற்றங்களும் படைகளும் அகற்றப்பட நேர்ந்தது. ஆனாலும் இன்னுமும் காஸா மீது இஸ்ரேலியக் குண்டுவீச்சும் ராணுவத் தாக்குதல்களும் கடக்கின்றன.

2006 ஜனவரியில் பலஸ்தீன அதிகாரசபைக்கு நடந்த தேர்தலில் ஹமாஸ் பல இடங்களைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் பெரும்



பான்மை வலிமையுடன் வெற்றிபெறும் என மேலை நாட்டு ஆட்சியாளர்களோ அவர்களது ஊடக நிறுவனங்களோ எதிர் பார்க்கவில்லை. வெற்றி எதுவானாலும் ஹமாஸ் தலைமையிலான ஒரு அரசாங் கத்தை அமெரிக்காவோ அதன் கூட்டாளி களோ ஏற்கமாட்டார்கள் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை.

ஹமாஸ் இயக்கத்தின் மீது பொருளா தார நெருக்குவாரங்களையும் அரசியல் நெருக்குவாரங்களையும் மட்டுமல் லாமல் போர் நெருக்குவாரங்களையும் இஸ்ரேலும் அதன் எசமான் நாடான அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான ஐரோப்பிய நாடுகளும் பயன்படுத்தத் தயங்கமாட்டா என்பது ஹமாஸ் அறிந்திருக் கக்கூடிய ஒன்று. பலஸ்தீன நிருவாக அமைப்பை இயங்கவியலாமல் தடுக்கிற நடவடிக்கைகளாகவே தேர்தல் முடிவு களை அடுத்து அமெரிக்கா, ஹமாஸ் தலைமையிலான ஆட்சிக்கு பொருளா தார உதவி வழங்காது என்று அறிவித்துள்ளது. ஹமாசுடன் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை என்று இஸ் ரேல் அறிவித்துள்ளது. ஐரோப்பிய நாடு கள், ஹமாஸ் வன்முறையைக் கைவிட் டால் மட்டுமே உதவிகிடைக்கும் என்று கூறியுள்ளன. ஹமாஸ் இவ்வாறான நெருக்குவாரங்களுக்கு பணிவதாக இருந் தால் அதன் வெற்றிக்கு ஒருவிதமான பெறுமதியும் இராது.

இஸ்ரேலை அங்கீகரிக்காத நாடுகள் பல உள்ளன. அவற்றுள் அமெரிக்கா வின் நேச நாடான சவூதி அராபியாவும் பிற அமெரிக்க நேச அரபு நாடுகளும் அடங்கும். இஸ்ரேலை அங்கீகரிப்பது என்பது இஸ்ரேல் எனப்படும் யூத மத வாத (ஸியோனிஸ) ஆட்சியொன்று பலாத்காரமாக பலஸ்தீன மண்ணில் நிறு வப்பட்டதை அங்கீகரிப்பது என்று ஆகும். இஸ்ரேல் ஐ.நா. சபையால் நிறுவப்பட்ட காரணத்தால் அது நிறுவப் பட்டது சரியாகிவிடாது. அதைவிட அது தனக்கு வழங்கப்பட்ட எல்லைகட்கும் அப்பால் தன்னை விஸ்தரித்துள்ளது. ஐ.நா. வழங்கிய இஸ்ரேலிய மண்ணி லிருந்தும் பின்பு இஸ்ரேலிய ஆக்கிரமிப் பிற்கு உட்பட்ட மண்ணிலிருந்தும் பலஸ் தீன மக்கள் கட்டாயமாக வெளியேற்றப் பட்டுள்ளனர். இஸ்ரேலை அங்கீகரிப்பது என்பது இந்தவிதமான சட்டவிரோதமான நடவடிக்கைகளை ஏற்பது என்றும் ஆகி விடும். எனவே ஸ்ரேல் என்ற மதச்சார்


ஒரு அரசு ஏற்கத்தகாதது. அதற் கான மாற்று என்ன என்ற கேள்வி எழுகி றது. இஸ்ரேலின் இடத்தில் யூதரும் அராபியரும் சமமான குடிமக்களாக வாழக்கூடிய ஒரு இஸ்ரேல் உட்பட்ட முழுப் பலஸ்தீனத்திலும் நிறுவப்பட வேண்டும் என்பது தான் சகல பலஸ்தீன இயக்கங்களதும் இலக்காக இருந்து வந்தது. இந்த நிலைப்பாட்டிலிருந்து பலஸ்தீன மக்கள் நழுவ வேண்டும்? என்று எதிர்பார்கிற எவரும் முதலில் பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்ட 6 தசாப்தகால அநீதிக்கு முடிவுகட்ட எதையாவது செய்ய வேண்டும்.

ஜனவரி இறுதியில் அமெரிக்கா, ஐக்கிய நாடு, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நான்கு அமைப்புக் களது தலைமைகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஹமாஸ் வன்முறையைக் கைவிட்டாலொழிய உதவி தருவதற்கு இல்லையென்று செய்த பிரகடனத்தை ஹமாஸ் மறுத்துள்ளதோடு, முதலில் வன்முறையைக் கைவிடுமாறு நால்வரும் இஸ்ரேலை வற்புறுத்துவதே நியாயம் என்றும் பாதிக்கப்பட்டவரைக் கண்டிப் பது தவறு எனவும் அறிவித்துள்ளது.

மேலை நாடுகளும் அவற்றின் அதிகாரத்திற்கு உட்பட்ட உலக நிறுவனமான ஐ.நா.வும் என்ன சொன்னாலும் பலஸ்தீன மக்களின் விதியைத் தீர்மானிக்க வேண்டியோர் பலஸ்தீனர்களே. அமைதிப் பேச்சுவார்த்தைகளும் இஸ்ரேலின் விட்டுக்கொடுப்புக்களும் பலஸ்தீன மக்களை மேலும் மேலும் ஏமாற்றி அவர்களை நிரந்தரமாகவே இஸ்ரேலிய ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு அடிமைச் சமூகமாக்கும் முயற்சிகளே என்பதுதான் பலஸ்தீன மக்களின் அனுபவம்.

அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளதும் மிரட்டல் பயனற்றது, அது பயனளிக்காது என்பதை அவர்களும் அறிவார்கள். எனவே அடுத்தகட்டமாக இரண்டு தந்திரோபாயங்கள் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்படலாம். அதில் ஒன்று ஹமாசுக்குக் குழிபறிக்கிற விதமாக அதன் எதிரிகளை வலுப்படுத்துகிற பணி. மற்றது பலஸ்தீன மக்கள் முற்றாகவே புறக்கணிக்கப்படுகிற ஒரு நிலை ஏற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக அமையும் என்பதால் ஹமாசுடன் ஒரு மூன்றாம் தரப்பு மூலம் சமரச முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

பலஸ்தீன மக்களுக்கு உலகில் பல நண்பர்கள் உள்ளனர். பலஸ்தீன மக்களின் ஜனநாயக முறையிலான தெரிவை அவர்கள் மதிக்கக் கடமைப்பட்டுள்ளனர். எனவே ஹமாஸை "வழிக்குக்கொண்டுவர" எடுக்கப்படுகிற கடும் நடவடிக்கைகள் அரபு, முஸ்லிம் நாடுகளி



> ஹமாஸ் பற்றி நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஹமாசுடன் எவரும் கடுமையாக முரண்படலாம். ஆனால் ஹமாஸைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயக உரிமையை பலஸ்தீன மக்களிடமிருந்து எவரும் பறிக்கக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

டையேயும், அமெரிக்க ஆதிகத்தை நிராகரிக்கிற நாடுகளிடையேயும் எவ்வித மான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஒட்டியே பலஸ்தீனத்தின் உடனடியான எதிர்காலம் அமையும். எவ்வாறாயினும் பலஸ்தீன மக்கள் இழப்பதற்கு அதிகம் இல்லாத மக்கள். அவர்கள் முன்பாக உள்ள தெரிவுகள் குறுக்கப்பட்டுள்ளன.

கடுமையான மதவாதப் போக்கைத் தனது கொள்கையாக ஹமாஸ் பேணுமாயின் அது முடிவில் தன்னைப் பலவீனப்படுத்திக்கொள்ளும். எனினும் ஹமாஸ் அதிகாரத்தை அழிக்க முயல்கிறவர்கள், ஹமாஸினுள்ளும் வெளியி லும், தீவிர மதவாத எழுச்சிக்கே உத வுவர். உருவாவது உடனடியான சூழல் இலகுவானதல்ல. ஹமாஸை மட்டுமே எதிர்ப்பது அவ்வாறான ஒரு சக்தியின் உருவாக்கத்துக்கு உதவமாட்டாது.

இஸ்ரேலிய ஸியோனிசமும், அமெ ரிக்க ஆதிக்கமும் முறியடிக்கப்படக் கூடிய ஒரு சூழ்நிலையிலேயே இஸ்ரேல் உட்பட்ட பலஸ்தீனப் பிரதேசத்திலும் மத்தியகிழக்கிலும் அமைதிக்கான வாய்ப்பு உண்டு. அதுவரை அமெரிக்க இஸ்ரேலிய அதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிரான போராட்டம் என்ன வடிவை எடுக்கும் என்று யாரும் எதிர்வு கூறுவது இயலாது. ஆயினும் ஹமாஸின் குறைபாடுகள் எத்தனை இருப்பினும் அதன் வெற்றி வரவேற்கத்தக்க ஒரு செய்தியாகும். அதை மறுக்கும் மேலாதிக முயற்சிகள் யாவும், உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக்குரியதாகவே அமையவேண்டும்.

இதற்கிடையில் பலஸ்தீன நிர்வாகத்தின் தலைவராகவுள்ள அபாஸ் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குடன் பேசி ஹமாஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதாயின் முதலில் இஸ்ரேலுடனான உடன்படிக்கையை ஏற்கவேண்டும் எனவும். இஸ்ரேலை அங்கீகரிப்பதோடு தமது வன்முறைகளை கைவிட வேண் டும் எனவும் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

இது ஹமாஸ் நிருவாகம் ஒன்று ஏற்படாமல் தடுக்கும் அமெரிக்க நோக்கங்கட்கு ஏற்பமுன்வைக்கப்பட்ட நிபந்தனைகள். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பும் வன்முறையும் நிற்கும் வரை இவற்றில் எதனையும் ஹமாஸ் ஏற்கும் வாய்ப்பு இல்லை. எனவே இது குறுகிய காலத்தில் பலஸ்தீனத்தில் புதிய நெருக்கடிகளை ஏற்படுத்தும். ஹமாஸ் பதவி ஏற்காமல் மதிக்கப்படுவதன் நீண்டகால விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும். இச்சூழலில் ஹமாஸ் தந்திரோபாயமாகத் தனக்கு ஏற்புடைய ஹமாஸ் உறுப்பினர்களல்லாதோரில் ஒருவரை அமைச்சரவை உருவாவதற்கு உடன்பட இடமுண்டு. பலஸ்தீனத்தின் அரசியல் நெருக்கடியைக் காரணங்காட்டி இஸ்ரேல் தனது இராணுவ ஆக்கிரமிப்பையும் தாக்குதல்களையும் தொடரும் வாய்ப்பு அதிகம். ஹமாஸ் தலைமை தனது அணுகுமுறையில் சில மாற்றங்களைப் புகுத்திப் புதிய வியூகங்களை வகுக்க வேண்டி தேவையும் அதனால் ஏற்படலாம். மதச்சார்பற்ற முற்போக்குச் சக்திகளுடனான புதிய அரசியல் உடன்பாடுகள் அதன் ஒரு பகுதியாக அமையக்கூடும்.

# திருக்கேதீச்சர மரபுகளும் ஐதீகங்களும்



பேராசிரியர் வி.சிவசாமி
(ஓய்வுநிலை சமஸ்கிருத மொழிப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழ் மக்கள் வந்தேறு குடிகளா தமிழ் மக்களுக்கு மரபு வழித் தாயகம் உண்டா ? என்று பலவாறாக தமிழ் மக்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை இல்லாதொழிக்கும் முயற்சிகள் பரவலாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும் தமிழ் மக்களதும் அவர்களது பூர்வீகம் தொடர்பாகவும் வரலாற்று சான்றுகள் சில இன்னும் எஞ்சி இருக்கின்றன.அவற்றுள் ஒன்றான திருக்கேதீச்சரத்தின் மரபுகள் மற்றும் ஐதீகங்கள் பற்றி ஆராய்கின்றது இந்த கட்டுரை

திருக்கேதீச்சரம் பற்றி விபரமாக அறிதற்கான நம்பகமான வரலாற்று மூலங்கள் அதிகம் இல்லாவிடினும் தமிழ், சங்கீதம், பாளி, சிங்களம் முத லிய மொழிகளிலுள்ள தொல்லியற் சின்னங்கள் சிலவும் வெளி நாட்டாசிரியர் குறிப்புகள் சிலவும் இத்திருத்தலம் பற்றி அறிதற்கு ஓரளவு துணைபுரிகின்றன.

புராதான காலத்திலே திருக்கேதீச்சரம் மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்ட தாகவும் அப்பெயரே மாதோட்டம், மாந் தோட்டம், மாந்தை என வந்துள்ளதா கவும் ஒரு சாரார் கருதுவர். இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த, மஹாதித்த பட்டணமாக, மஹாதித்த பட்டண, மஹாவுடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. மஹா தித்த எனும் சொல் வடமொழியிலுள்ள மஹாதீர்த்தம் எனும் பதத்திலிருந்து வந்திருக்கலாம். அவ்வாறாயின் இது பெலிய தீர்த்தம் உடைய இடமாக விளங்கியிருக்கின்றது இத்தலத்திலுள்ள பாலாவித் தீர்த்த விசேடம் இந்தியாவில் இருந்த தேவார முதலி களை நன்கு கவர்ந்துள்ளமை கவனிக்கப்பட வேண்டியது. பௌத்த மரபுகளிலும் இவ்விடம் சைவசமயச் செல்வாக்குக் கூடுத லாக நிலவிய இடமாகவே கூறப்பட்டுள்ளது.பொதுவாக நோக்கும் போது மாந்தையினைப் புராதன இலங்கையின் முக்கியமான ஒரு துறைமுக நகராகவும் திருக்கேதீச்சரத் தினை அங்கு மிளிர்ந்த பிரபல்லியமான சிவத்தலமாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையின் மரபு வழி வரலாற்றினைக் கூறும் மகாவம்சம், சூளவம்சம் ஆகியன மாதோட்டத்திற் கூடாக விஜயன் காலந்தொட்டு இலங் கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடை யிலே நிலவி வந்துள்ள தொடர்புகள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளன

### பௌராணிகர் மரபுகள்

தமிழகத்திலுள்ள பிரதான கோவில்கள் சிலவற்றிற்கு இருப்பதைப் போன்று திருக்கேதீச்சரத்திற்கும் பழைமை வாய்ந்த

புராண மொன்று இருந்திருகக வேண்டும். சேர். பொன். இராமநாதன் இதன் சிறப்புக் கூறும் புராணமொன்று இருந்து மறைந்து விட்டதாக 1887 இல் குறிப்பிட்டுள்ளார். வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தின் பகுதிகளில் ஒன்றான தக்ஷிண கைலாச மஹாத்திமியத்திலே ஸ்ரீ கேதீஸ்வர ஷேத்திர வைபவம் என்ற பிரிவிலே திருக்கேதீச்சரச் சிறப்புப் பௌராணிகர் ரீதியிலே கூறப்பட்டுள்ளது.


பெருமை வாய்ந்த தஷிணகைலாசம் என்னும் திருக்கோணேஸ்வரத்திலே சிவபெருமான் உமையம்மையாருடன் பிரயஷமாக இருத்தலினாலும் மாதோட்டம் என்னும் திருக்கேதீஸ்வரத்திலே அடியார்க்கருள் புரியும் நோக்கமாகக் கௌரியம்பிகை நேத்திரானந்தம் கொள்ளப் பஞ்ச கிருத்திய நடனஞ் செய்து கொண்டிருத்தலினாலும் இவ் இலங்கா தேசமானது 56 தேசங்களிலும் சிறந்ததாக இருக்கின்றது. இதற்கொப்பான தேசம் பிறிதொன்றுண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை.

என முக்காலம் உணர்ந்த சூதமுனிவர் நைமிஸாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

எவ்வருணத்தினனாயினும் எக்குலத்தினனாயினும் பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீஸ்வர தரிசனம் செய்வானேல் போகம், மோட்சம் இரண்டையும் பெறுவான். இத்தலத்துக்கிணையான புண்ணிய ஷேத்திர முன்னுண்டானதும் இனியுண்டாவதுமில்லை. என்றும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

சைவப் பௌராணிகர் மரபில் இலங்கையிலுள்ள இரு சிவத்தலங் களின் பெருமையுஞ் சிறப்பும் எவ்வாற மைந்தன என்பதற்கு இவை சான்றாகின்றன. இந்நூலினைத் தழுவி 1970 இல் அச்சுவேலி சிவஸ்ரீ ச.கு.வைத் தீஸ்வரக் குருக்கள் திருக்கேதீச்சரப் புராணம் பாடியுள்ளார் என்பது நினைவு கூரத்தக்கது.

ஆதிசேடனும் வாயுதேவனும் புரிந்த கடும் போரின் விளைவாகப் பிடுங்கப்படு வெவ்வேறு இடங்களில் விழுந்தன கயிலைமலையின் சிகரங்களே திரிகூடமலை, கந்தமாதனம், திருக்கேதீஸ்வரம் ஆகியன என்று புராணங்கள் கூறுகின்றன. மேலும் திருக்கேதீஸ்வரம் தென் கைலாசம் எனவும் அங்கு வழங்கப்பட்டது. கேதீச்சரம் என்ற பெயர் ஏற்படுவதற்குக் கேதுபகவான் வழிபட்டமை காரணமாகக் கூறப்படுகின்றது. கேதுபகவான் கேதீஸ்வர அஷ்டகம் பாடி இங்கு



திருவருள் பெற்றாராம்.இவ்வஷ்ட கத்திலே கேதீஸ்வர சிறப்பும் அம்மை யப்பர் மகிமையும் ஒருங்கே கூறப்படு கின்றன. மகாதுவட்டாபுரம் என்ற பெயர் தோன்றுவதற்கு தேவதச்சன் மகாதுவட்ட இங்கு சிவபிரானையும் கௌரியம்பாளையும் பூசித்தித் திருவருள் பெற்றமையும் காரணமாகக் கூறப்படும். தசரத இராமன் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பரமவஹத்தி பாவம் நீங்கத் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ் வரம், முன்னேஸ்வரம் ஆகியதலங்களில் லிங்கப்பிரதிட்டை செய்து சிவபிரானை வணங்கினான் என்றும் கூறப்படுகிறது. இங்கு அகத்தியமுனிவர் முறையே பத்தும் ஒன்பதும் ஆகிய சுலோகங்கள் கொண்ட துதிகளால் சிவபிரானை வணங்கித் திருவருள் பெற்றார் எனப்படுகிறது. அகத்தியர் பாடிய பத்துச் சுலோகம் அமைந்த துதி கேதீஸ்வர தசகம் எனப்படும். இவ்விரு துதிகளும் கேதீஸ்வர அஷ்டகமும் கேதீஸ்வரம் பற்றிய தேவாரப் பதிகங்களை நினைவூட்டுகின்றன என்று கூறல் இங்கு பொருத்தமாகும்.

மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயன் மேற்குத் திசையில் பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீஸ்வரத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட் டுள்ளது.

**வரலாற்று மரபுகள்**

மகாவம்சமும் மகாவம்சமகாவும் திருகோணமலையிலும் வேறிரு இடங்களிலும் இருந்த சிவலிங்கத் தலங்களை அழித்தனவாகக் கூறும் மகாசேனனின் (கி.பி.276 - 303) மகனும் இலங்கைப் பௌத்தர்களின் புனிதச் சின்னங்களிலொன்றான தந்ததாது இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தவனுமாகிய ஸ்ரீ மேகவண்ணன் (கி.பி.303 - 331) காலத்திலே திருக்கேதீச்சரத்தில் அழகியகோயில் ஒன்றிருந்தது என்று தந்ததாதுவின் வரலாற்றினைக்கூறும் தாடா வம்சம் கூறுகின்றது.

கி.பி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும், கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளும் திருக்கேதீச்சரம் பற்றித் தனித் தனியே பதிகங்கள் பாடியுள்ளனர். சமகாலத்திலும் அதற்குமுன்னரும் அதன் சிறப்புத் தமிழகத்திலே நன்கு நிலவியமையாலயே தேவாரம் பாடிய நாயன்மார் பாமாலை சூட்டினர். அப்பர் சுவாமிகளின் தேவாரமொன்றிலும் கேதீச்சரம் பற்றிய குறிப்பிடப்பட்டுள்ளது.

அனுராதபுரகாலப் பிற்பகுதிக்குரிய இரு சிங்களக் கல்வெட்டுக்கள் மூலம் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய

அனுராதபுரத்திலும் தென் கோடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும் சிறப்பும் தெளிவாகின்றன. அனுராதபுரக்கல்வெட்டில் ஜேதவன ஸ்தூபிக்கு வழங்கப்பட்டுள்ள தானம் ஒன்றினை மீறியவர்கள் மஹாவது (மஹாதீர்த் தம்) எனும் இடத்தில் ஆட்டினைக் கொன்ற பாவங்களையடைவர் என்றும் கதிர்காமக் கல்வெட்டில் குறிப்பிட்ட விதி களை மீறுவோர் மஹாதொடியிலே (மஹாதீர்த்தத்திலே) பசுக்களைக் கொன்றோரின் பாவங்களை எய்துவர் கருதப்படுகின்றது.

பன்னிரெண்டாம் நூற்றாண்டிலே நாயன்மார் வரலாற்றினைப் பக்திச் சுவை ததும்பக் காப்பிய வடிவிலமைத் துக் கூறிய சேக்கிழார் சுவாமிகள் திருக் கோணேஸ்வரம் , திருக்கேதீச்சரம் பற்றி யும் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே ஏற்றப்பட்ட இரண்டாம் பாண்டியப் பேரர சின் ஆதிக்கத்தின் விளைவாகத் திருக் கேதீஸ்வரம் சைவரான பாண்டியப் பெரு மன்னரின் ஆதரவினைப் பெற்றது. பாண் டியக்கல்வெட்டுக்கள் திருக்கேதீஸ்வரத் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதன் விளைவாகவே இத்தலம் அழிவுற்றது . திருக்கேதீச்சரம் பற்றிப் போர்த்துக்கேயர் விரிவாகக் குறிப்பிடாதபோதும் மறைமுகமான குறிப்புகள் உள்ளன. குவெரோஸ் சுவாமிகள் தமது நூலில் மன்னார்ப்பகுதியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பெரிதும் சிறிதுமான இருபது சைவ விக்கிரகங்களைட பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவை உருக் கப்பட்டுக் கிறிஸ்தவ தேவாலய மணி யொன்று செய்யப் பயன்படுத்தப்பட்டன. இவை திருக்கேதீச்சரத்தை சேர்ந்தவை



என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் கி.பி பத்தாம் நூற்றாண்டில் இலங்கையின் தலைநகரிலும் தென்கோ டியிலும் இத்தலம் புனித இடமாய்க் கரு தப்பட்டமை தெளிவாம். எச்.ஏல்லாவல பௌத்தர்களிலும் சைவர்களுக்கே இஃது அதிமுக்கியமான புனித இடமாக விளங்கிற்று என எடுத்துக்காட்டியுள்ளார்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டின் கடைக் கூறில் இலங்கையில் சோழர் ஆட்சி நிலைபெற்றபோது திருக்கேதீச்சரமும் அவர்களுடைய ஆதரவைப்பெற்றது. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுக ளைச் சேர்ந்த இரு சோழர் கல்வெட்டுக் களில் மாதோட்டத்திலே திகழ்ந்த ராஜராஜேஸ்வரம் திருவிராமிஸ்வரம் ஆகிய இரு கோயில்கள் பற்றிக் குறிப்பி டப்பட்டுள்ளது. இவற்றுள் ராஜராஜேஸ் வரம் திருக்கேதீச்சரத்திற்கு அளிக்கப் பட்ட புதிய பெயராக இருக்கலாம் என்று தில் இதுவரை கிடையாத போதும் இக் காலத்திற்குரிய கட்டடப்பகுதிகள் சில இருப்பதாகக் கருதப்படுகின்றது. மேலும் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்துச் சிதம்பரம் கல்வெட்டொன்றிலே திருக்கே தீச்சரம் பற்றிய குறிப்புக்காணப்படு கின்றது.

பாண்டியருக்குப் பின் ஆதிக்கம் பெற்ற விசயநகரப் பெருமன்னர் இலங்கையின் செல்வாக்கின் போது திருக்கேதீச்சரமும் இவர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்க லாம் என்று வரலாற்றாசிரியர் கருதுவர்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் மன்னர்ப்பகுதி போர்த்துக்கேயர் ஆட்சிக் குட்பட்டது. அராலி விசுவநாத சாஸ்திரி யாரின் சம்பவக்குறிப்பிலே திருக்கே தீச்சரத்தின் ஒருபகுதியினை 1540இல் என்பது கவனிக்கத்தக்கது. போர்த்துக் கேயருக்கு முன்பே திருக்கேதீச்சரம் புகழ் மற்கிற்று. என ஒரு சாரார் கருதி னும் கூத்தோ எனும் போர்த்துக்கேய ஆசிரியர் மிகப்பெரிய உருக்குச் சங்கிலி யொன்று கிடைத்தமை பற்றிக் குறிப்பிட் டுள்ளார். ஊர்காவற்துறையிலுள்ள ஹமென்ஹில் கோட்டையிலுள்ள சாசனம் பொறிக்கப்பட்ட தூண் டச்சுக்காரரினால் மாதோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டதனை நோக்கும் போது சில பகுதிகளாவது டச்சுக்காரர் காலத்தில் எஞ்சியிருந்தமையினை ஊகிக்கலாம்.

1872 இலே நாவலர் பெருமான் திருக்கேதீச்சரத்தின் மகிமையினை யாழ்ப்பாணத்துச் சைவமக்களுக்கு நினைவூட்டினார். இதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் பற்றி ஈழத்துச் சைவப் பெருமக்களும் வேறு சிலரும் மேற் கொண்ட முயற்சியின் விளைவாக 1903 இல் புதிய கோயில் உருவாகித் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

# காதலர் தின சிறப்பிதழ்

**காதலர் தினத்தன்று எதிர்பட்ட சில நண்பர்களிடம் "காதல்" குறித்து கருத்து கேட்டோம் (கருத்தறிவதற்கு பல விடயங்கள் இருந்தாலும் இலங்கையில் இருக்கின்றோம் என்பதால் பிரச்சினை தராத காதல் குறித்து கேட்டோம்)**

காதல் என்பது ஓமோன் தொழிற்பாட்டால் ஏற்படும் ஒருவித பாலியல் ஈர்ப்பு தன்கு வேண்டிய துணையை தானே தேடும் பாலியல் தேர்வு

**Dr.ஜோன்சன் - பொறளை**

( அடிக்கடி Strike வருவதால் படிச்சதெல்லாம் மறந்து போகாமல் இருக்க காதல் பற்றி விஞ்ஞான விளக்கம் சொல்லியிருக்கிறார் போல...)

30 வயதின் பின்னரும் காதலிக்கலாமா ?
30 வயதிற்கு பின்னும் பெற்றொர் உனக்கு மணப்பெண்ணை தேடாவிட்டால் காதலிப்பதை தவிர வேறு

சிறுவயது போலி கலந்தது
பதின்ம வயதுக் காதல் காமம் கலந்தது
ஒருதலைக் காதல் வறுமை கலந்தது
முதுமையில் காதல் காலம் கடந்தது
திருமணத்தின் பின் காதல் நீடுளி வாழ்வது

**முஜீபன்**

(எல்லா இடமும் கலப்படம் "மதுர" வந்தால்தான் சரி போல )

காதல் வேலைவாய்ப்பு போன்றது
எல்லாரும் Apply பண்ணலாம் ஆனால் சிலருக்கு தான் கிடைக்கும்.
கிடைக்காவிட்டால் Feel பண்ண தேவையில்லை அதே Application ஐ வேறை ஆளுக்கும்

நட்பின் ம
மலரும் கா
சிறந்தது.
நண்பர்களா
இருந்து
புரிந்துணர்வு
காதலர்களா
மாறினால் சிற

**சஞ்சீவன் -**
**வயம்ப**
**பல்கலைக்கழ**

அப்பதானே ஐ
நான் frindeshipa

காதல் என்பது இனிமையான வேதனைகள் தரும் உணர்வு.

**நிசாகரன் - மட்டக்களப்பு**

காதல் உயிரில் ஊற்றெடுக்கும் உன்னத உணர்வு .காமம் பொய் பித்தலாட்டம் எல்லாம் கலந்து புனிதம் கெட்டுப் போகின்றது.

**பிரியன் - தொழில்நுட்பக் கல்லூரி**

அப்ப காதல் தயிரும் ஒன்று தானோ ? பால் கெட்டால் தயிர், காதல்

முத்தத்தைப் பற்றிய
சில பொன்மொழிகள்...

முத்தத்தின் ஒலி பீரங்கி சத்தத்தை விட மென்மையானது. ஆனால் அதன் எ
அதிக நாள் நீடிக்கிறது.

முத்தம் ரியல் எஸ்டேட் மாதிரி. ஆதில் லொகேஷன் ரொம்ப முக்கியம்.

மௌனத்தைக் கலைக்க சிறந்த வழி முத்தம்தான்.

ஆண்கள் தங்கள் கடைசி முத்தத்தை மறந்து நீண்டகாலம் ஆன பிறகும், பெண்க
முதல் முத்தத்தை ஞாபகம் வைத்திருக்கிறார்கள்.

ஆண்கள் நாலு லார்ஜ் உள்ளே இறங்கிய பிறகு தன்னை மறந்துவிடுவார்கள். பெண
நான்கு முத்தங்களுக்குப் பிறகு எல்லாவற்றையும் மறந்துவிடுகிறார்கள்.

முத்தம் காதலின் மொழி என்றால் அந்த மொழியில் நாம் பேச நிறைய இருக்கிறது.

முத்தம் உணவைப் போல: ஒரு வாய் சாப்பிட்டால் போதவே போதாது. முத்தம் உப்பு
குடிப்பது போல, குடிக்கக் குடிக்க தாகம் அதிகரிக்கிறது.

ஆண்கள் தங்கள் முதல் முத்தத்திற்கு பெண்களைக் கெஞ்சுகிறார்கள். பெண்கள்
கடைசி முத்தத்திற்கு ஆண்களைக் கெஞ்சுகிறார்கள்.

முத்தத்தை உதட்டில் கொடுக்காமல் ஃப்ளையிங் கிஸ் கொடுப்பவர்கள்
உலகமகா சோம்பேறிகள்.

Happy Valentine's Day!

...பின் மத்தியில்
...ரும் காதலே
...ந்த..
...பர்களாக
...ந்து
...துணர்வுடன்
...ர்களாக
...ால் சிறப்பு.
...வன்
...லக்கழகம்
...னே ஐயயோ
...adeshipa

அப்பா அம்மா
பெண்பாத்து முடித்த
வேதனையில் நண்பனின்
புலம்பல் இது
திருமணம் என்பது
அனைவருக்கும்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கபடுகையில்
எனக்கு மட்டும் எப்படி
எனது ஊரில்
நிச்சயிக்கப்பட்டது

## ரோஜாப் பூ

ஏறக்குறைய காதலர் உலகில் அங்கிங்கெனாதபடி எங்கும் வலம் வரும் ஒரு காதல் சின்னம்தான் ரோஸ் என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது. (ரோஜாப் பூ கிடைக்காத இடங்களில் மாமன், மச்சான்கள் மல்லிகைப் பூ வாங்கிக் கொடுத்திருக்கலாம்) 35 மில்லியன் வருடங்களாக உலகில் வாசமளித்து வாசம் செய்கிற பூ ரோஜாப்பூ! வரலாறாக இருக்கிற ரோஜாப்பூவிற்குக்கூட சில ரகசியம் உண்டு தெரியுமா உங்களுக்கு. அத்தனை ரகசியத்தையும் இந்தப் பக்கங்களில் சொல்லிவிட முடியாது. வாலண்டைன் தின ரகசியத்தை மட்டும் உங்களுக்கு ரகசியமாகச் சொல்லி வைக்கிறேன். வாலண்டைன் தினத்தன்று ஒரேயொரு சிகப்பு ரோஜாவைக் கொடுத்தால் நான் உன்னை மனதார நேசிக்கிறேன் என்று அர்த்தம். ஒரு வெள்ளை நிற ரோஜாவைக் கொடுத்தால் நீதான் என் சொர்க்கமென்று அர்த்தம். ஒரு வெள்ளை ரோஜாவோடு ஒரு ரோஜா மொட்டும் சேர்த்துக் கொடுத்தால் "You're too young for LOVE" என்று மென்மையாகப் பொருள் சொல்லும்! அதற்காக சிவப்பு ரோஜாவையும் வெள்ளை ரோஜாவையும் கையில் எடுத்துக் கொண்டுபோய் கண்டவர்களிடம் கொடுத்தால் வேறு வகையான சன்மானம், வெகுமதி செமர்த்தியாகக் கிடைக்கலாம். அதற்கு நான் பொறுப்பில்லை சாமி & ஆளை விடுங்கள்! ஆல்பிரட் பேர்ணாண்டோ விஸ்கான்சின்

## கிரீட்டிங் கார்ட்ஸ்

பிரிட்டி பெண் ஓவியர் கேட்டி கிரீன்வே 1865களில் வாழ்த்து அட்டைகளை வெளியிட்டார். முடிக்கப்பட்ட அட்டையின் உட்பக்கம் வாழ்த்துச் செய்தி எழுதுவதற்காகக் காலியிடம் விட்டும், வெளிப்பக்கங்களில் குழந்தைகள், பூந்தோட்டங்கள் போன்ற ஓவியங்களுடன் வெளியிட்டார். இதனைக் கண்ட அமெரிக்கப் பதிப்பாளர் எஸ்தர் (மசாச்சுசெட்ஸ்) முதன்முதலில் வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து விற்க கடைகளில் ஆர்டர் பெற்றார்.

பெண்கள் சிலரை வேலைக்கு வைத்துக்கொண்டு விதவிதமான வாலண்டைன் தின வாழ்த்து அட்டைகளைச் செய்து விற்கத் துவங்கினார். நல்ல வரவேற்பு கிடைக்க கைவேலைப்பாடுகளுடன் கூடிய புதிய டிசைன்களை அறிமுகப்படுத்தினார். குறுகிய காலத்தில் அதாவது 1870 லியே ஒரு லட்சம் டாலர் லாபம் ஈட்டினார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு டாலரிலிருந்து 35 டாலர் வரை வாலண்டைன் வாழ்த்து அட்டை விற்று விற்பனையில் ஒரு ரெக்கார்டு பிரேக் ஏற்படுத்தினார். சிகாகோ அஞ்சலகத்துக்கு திடீரென வந்து குவிந்த 25 லட்சம் வாழ்த்து அட்டைகளை நாங்கள் டெலிவரி செய்ய மாட்டோம் என்று தெருவில் வீசி எறிந்த நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கது.

...அதன் எதிரொலி

...பெண்கள் தங்கள்

...ர். பெண்கள்

...றது.
...உ..பு நீரைக்

...பெண்கள் தங்கள்

...வர்கள்

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பல்வேறு விதமான அரசியல் வியூகங்களின் மத்தியில் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாத பாதையிலேயே செல்கிறது.

பேச்சுவார்த்தைகள், சமாதானம், யுத்தம் என்ற பாதைகளில் எல்லாம் நீண்ட பயணங்களைச் செய்து சலித்துப் போன அரசியல் தலைமைகளும் கட்சிக ளும் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் சந்திப்புக்களுக்காக அணிசேர முற்படுகின்றன.

சகல கோணங்களிலும் நடைபெறுகின்ற பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படமுன்னர் பல்வேறு மட்டங்களில் சந்திப்புக்களும் சிந்திப்புக்களும் நடந்தேறுகின்றன. இது வரை காலமாக பிரச்சார மேடைகளி லும், அறிக்கைகள் மூலமாகவும், வெளிப்பட்டுள்ள கருத்துக்கள் அரசியல் வங்குரோத்துத்தனங்களையே வெளிப்படுத்தியுள்ளன.

சமாதானத்தையும் அமைதியையும், நிரந்தரமாக உருவாக்கும் முயற்சிகள் ஒட்டுமொத்தமாக ஈடாடிப்போயுள்ளன. அரசியல் தலைமைகளும், கட்சிகளும், வெறுமனே சுயநல அரசியல் இருப்புக் என்ற பூச்சாண்டித் தனங்க ளுடன் இலங்கையின் தேசிய சமாதான அரசியல் நகர்வுகளின் மத்தியில் மூக்கை நுழைக்கின்றன.

வெளிநாட்டு அரசியலைப் பொறுத்த வரையில் தமது சற்றுக்குறும்புத் தனங்க ளுடன் நகர முற்பட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் கொண்டலீசா ரைஸைச் சந்தித்ததும், பின்னர் அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட காட்டமான கருத்தும், இதனோடு ஒட்டியபடி நடந்தேறிய ஈரானுக்கு எதிராக வாக்களிக்க



# விட்டுக்கொடுப்புகளை அதன் மற்றுமொரு

## மாதொருபாகன்

றன அரசியல் தில்லுமுல்லுகளையெல்லாம் அவதானிப்பவர்கள் தென்னி லங்கை அரசியலில் எந்தவகையிலும் ஒத்துழைப்புகளுக்கான சாத்தியங்கள் இல்லையென்பதை குழப்பங்களுக்கு மத்தியில் அவதானித்து வருகின்றனர்.

ஜெனீவா செல்லும் அரச குழு, ஆரவாரங்களுடன் ஒரு பயிற்சிப்பட்டறையையே நடாத்தி முடித்துள்ளது. ஜெனீவாவில் நடைபெறப்போகுதாம் "அமைதி, சமாதானம், அரசியல் தீர்வுகளுக்கான பேச்சுகள்(?) எந்த விதமான அடிப்படைகளோடு இருக்கப்போகின்றன. களைத் தேடியபடி அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் நகர்வுகள் மட்டும் தொடர்ந்தால் எல்லாமே வெறும் நாடாகமாகத்தான் போய்முடியும்.

யதார்த்த நிலைமையை உணராத அரசியல் போக்குகள் சகல மட்டங்களி லும் நாட்டின் எதிர்காலத்தோடு விளை யாடுகின்றன. சர்வதேச சக்திகள் "பயங் கரவாதம்" வைத்த விளையாட்டும், சர்வதேச அரசியலின் பின்னணியிலான மரணப் பூட்டாகிவிட்டது.

பேச்சுவார்த்தைகளுக்காக அரச தரப் பினர் பயிற்சிப்பட்டறை என்ற ஆரவாரங் களுடன் தயாரிப்பு முயற்சிகளில் இறங்கியிருப்பது சர்ச்சைகள் உருவாகினால் அவற்றிற்கு முகம்கொடுப்பது என்பது ஒரு புறம் இருக்க தமக்கு இடையில் ஒருவித இணக்கப்பாட்டை ஒருவித இணக்கப் பாட்டை உருவாக்கும் முயற்சி யாகவும் அமைகின்றது.

கடந்த காலப் பேச்சுவார்த்தைகளின்

பட்டறிவுகளோடு அவதானித்தால், நாடெங்கும் காடைத்தனங்கள் ஜனநாயகம் என்ற பெயரோடு கட்டவிழ்ந்து விடப்பட்டுள்ளதா என்கின்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். அனுபவப் பாடங்களுடன் பின்னடைவுகளை அவதானித்தால் சமாதான முயற்சிகள் செயலுருப் பெற முடியுமா? என்ற கேள்விதான் சகல கோணங்களிலும் வெளிப்படுகிறது.

தேசிய அரசியலை இப்பொழுதுள்ள முரண்பாடுகளின் மத்தியிலேயே தள்ளி நாறவைத்துள்ள இரு பிரதான கட்சிகளும் ஜே.வி.பி.யினர் கட்ட முற்படும் குளவிக்கூட்டை உடைக்க மாட்டாது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு அடிப்படைகளைத் தொடும் பேச்சாகக்கூட இருக்கப்போவதில்லை. அரசியல் தீர்வு என்பதற்கு அப்பால் எத்தனையோ விடயங்கள் அட்டவணையில் உள்ளன.

யுத்தநிறுத்த உடன்பாடு முதல் மோதல் நிலைமைகளினைத் தவிர்ப்பதற் கான நிலைப்பாடுகள், முதல் இராணுவ நிலைப்பாடுகள், அடாவடித்தனங்களைப் பற்றி எல்லாம் பேச்சுக்கள் எழுவது தவிர்க்க முடியாதது! இந்தியா தனது வழமையான "கில்லாடித்தனங்களுடன்" தையே ஏமாற்றி வந்தமை வரலாறு.

இப்பொழுது நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதோ, பரபரப்படைவதோ, எதிர்பார்ப்பதற்கோ எதுவுமில்லை என்பது தான் தெளிவானது.

எத்தனை முறை, எத்தனை பேர், எத்தனை கட்சிகள் தமது எதிர்கால அரசியலுக்கு வாய்ப்பான வியூகங்களை வகுத்தபடி கூடினாலும் சரி, பேசினாலும் சரி, தேசிய சமாதானம் பற்றியதேடல் ஒரு அங்குலம் கூட அசையப்போவதில்லை.

இனந்துவ அரசியல் இப்பொழுது தேசிய



# விரும்பாத தென்னிலங்கையும் சமாதான முனைப்பும்

சுயநலத்தை இழந்துபோயுள்ளமைதான் மிஞ்சியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றபடி இதுவரை காலம் நடைபெற்றவையெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை என்பதை அறிந்த தமிழ் தலைமைகள் நடைபெறவிருக்கின்றன பேச்சுவார்த்தைகள் குழம்பிப்போயுள்ளன.

பேச்சுவார்த்தைகள் எந்தவகையிலும், முழு அளவிலான பேச்சுவார்த்தையாக இருக்கப்போவதில்லை. வெறுமனே யுத்த உடன்பாட்டைப்பற்றிய அலசலாக வும், வெறுமனே நேரத்தை வீணடிக்கும் விடயமாகவே இருக்கப்போகின்றது.

காரியங்களைச் செய்கின்றது.

கடந்த காலப் பேச்சுவார்த்தைகளில் எல்லாம் பங்கு பற்றி, பேச்சுவார்த்தைக் குழுவிற்குத் தலைமை தாங்கும் அன்டன் பாலசிங்கத்தின் முன்னால், அரச குழுவின் தலைவர் உட்பட அனுபவமற்ற பலர் ஜெனிவா சந்திப்புக்கு முகம் கொடுக்கப்போகின்றனர்.

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் எப்பொழுதுமே பேச்சுவார்தைகள் என் பூசி மெழுகங்களுடன், தமிழினத்தை மட்டுமல்ல சர்வதேச சமூகத்

அரசியலில் படுபயங்கரமாக வேரூன்றியுள்ளது. உறுமயவையும், ஜே.வீ.பியையும் சமாளிப்பது ஜனாதிபதி மகிந்தவுக்கு இலேசான காரியமாக இருக்கப்போவதில்லை.

இராணுவக் கெடுபிடிகளும் அமைதியீனங்களும் நாட்டின் நிம்மதியைக் குலைத்து வருகின்றன. பேச்சு வார்த்தைக் குழுவிற்கான பயிற்சிப் பட்ட றைக்கப்பால் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ பேச்சுவார்த்தைகள் பற்றியும் யுத்த நிறுத்த உடன்படிக்கை பற்றியும் முப்படைத் தளபதிகளுடன் ஆலோ சனை

நடாத்தியுள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும், தமிழ் பேசும் இனங்களின் அரசியல் தலைமைகளும் பேச்சுக்களைத் தொடங் கிப் புரையோடிப் போயுள்ள தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். சமாதானம் பேச்சு வார்த்தை என்ற விடயங்களெல்லாம் பேசிப் பேசிப் புளித்துப்போன விவகார மாகிவிட்டது.



வடகிழக்குப் பிரதேசம் மட்டுமல்ல இப் பொழுது இலங்கையின் சகல மூலை முடுக்குகளும் வன்முறைகளின் இருப்பி டமாகிவிட்டது. இராணுவ நெருக்குவாரங் கள், அடாவடித்தனங்கள், அட்டகாசங் கள் வடகிழக்கிலுள்ள தமிழர் தாயகத்தை பதற் றங்களுக்குள் நிறுத்தியுள் ளது.

தென்னிலங்கையிலுள்ள அரசியல் சக்திகள், தமிழ் பேசும் மக்களின் அடிப் படை உரிமைகள் மனித உரிமைகளை எல்லாம் கணக்கெடுக்காது, பயங் கரவாதக் கூச்சலகளை தொடர்வது மேலும் மேலும் தொடர்வதால், "பிரிவினைதான்" கடைசிக் கந்தாயமாகப் போய்முடி யும்.

தென்னிலங்கை சக்திகளின் மத்தியில், வரலாற்றுக் குருட்டுத் தனங்கள் மட்டு மல்ல நிரந்தர அரசியல் தீர்வுக்கான அடிப்படைகளே இன்றும் தெளிவுபட வில்லை. ஒற்றையாட்சி, ஒன்றுபட்ட இலங்கை, அதிகாரப் பரவலாக்கம், சமஸ்டி ஆட்சிமுறை என்ற வரிசையி லான விடயங்கள் எழுந்தமானமாகப் போடப்படுகின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சமாதானத் தேடல் என்ற நகர்வுகளின் பின்னர் இப் பொழுது தமிழ் மக்கள் மீது தொடரும் தேடுதல், வதை முதலான அனைத்து இம்சைகளும் தேசிய ஒற்றுமை என்ற பேச்சிற்கே இடமில்லாத நிலைமையைத் தோற்றுவித்து வருகின்றது.

விரும்பியோ விரும்பாமலோ தமிழ் பேசும் மக்களின் தலைமைத்துவ முன்னீட்டைப் பெற்றுள்ள விடுதலைப் புலிகளை பலம் பலவீனங்களையெல் லாம் மேவியபடி தமிழ் மக்களின் அரசி யல் தலைமைகளும் அனுசரித்து நகரு கின்றன. நம்பிக்கையைக் கட்டியெழுப் பும் அரசியலுக்குச் சாதகமான சூழலை உருவாக்குவது விடுதலைப் புலிகளிடம் மட்டுமல்ல சகல அரசியல் நகர்வுகளி லும் தங்கியுள்ளது.

வடகிழக்குப் பிரதேசத்திலே இராணுவ நடமாட்டங்களைக் குறைத்து மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.


வடகிழக்குப் பிரச்சனையை இராணுவ மனோநிலையோடும் பயங்கரவாதச் சிந்தனைகளால் தொடர்ந்தும் இலங்கை அரசியல் சக்திகள் அணுகினால் விளை வுகள் விபரீதமாகத்தான் போய்முடியும்.

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பதற்கு அப்பால் இனவாத அரசியல் சக்திகளிடமிருந்தும் இராணுவ ஆக்கி ரமிப்புகளிலிருந்து, நாட்டையும் மக்க ளையும் அரசியல் சக்திகள் விடுவிக்க வேண்டும்.

நிரந்தர அரசியல் தீர் வொன்று உருவாக்கப் பட்டு தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கைக்கு இடமளிக்கப் பட வேண்டும்.

அரசாங்கமும் எதிர்க்கட் சியும் வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற் பட்டு ஆக்கபூர்வமான முடி வுகளை எடுக்க உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்கள் எவ்வளவு தூரம் முற்பட் டாலும் அரசியல் சக்திக ளின் மனம் திருந்தாதவரை எதுவுமே நடைபெறப்போ வதில்லை.

வெறுமனே பேச்சுவார்த்தை சமாதா னம் என்ற கூச்சலகளை விட்டு ஆக்கபூர் வமான அடிப்படைகளுடன் ஒரு நிரந்தர



சமாதானத்திற்கான அடித்தளத்தை பிரிவுபடுத்த வேண்டும். இந்த நாட்டை மொழி முரண்பாடற்ற.



# அத்துமீறும் செவிகள்

அடிப்பதைவிட இப்போது கேட்பதே போராகிவிட்டது. பேச்சுவார்த்தைகளை விட யாரும் பேசும் வார்த்தைகள் மீது தமது கவனத்தை படைகள் திருப்பியிருக்கின்றன. இந்தவகையில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் உலகின் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ள ஒரு விடயம் Eaves dropping ஆகத்தான் இருக்கும்.

Eaves dropping என்ற சொல் புதிதே தவிர, செயல் புதியதல்ல. Eaves dropping என்பது ஒட்டுக்கேட்பது. மருமகள் மகனோடு பேசுவதை நேர காலத்துக்குத் தூங்கித் தொலைக்காத மாமி கேட்கும் அதே கதைதான். மாமி ஒட்டுக் கேட்டால் வீட்டு விவகாரமாகும், ஆமி ஒட்டுக்கேட்டால் நாடும் உலகும் விவகாரமாகிற கதை இது.

புஷ் நிர்வாகத்திற்கு தலையிடியாய் இந்த விடயம் மாறியிருப்பது வியப்பிற்குரியதல்ல ஆனால் ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட இதன் தாக்கங்கள் பிரதிபலிப்புகளை எற்படுத்தியுள்ளது தான் இங்கு முக்கியம் பெறுகின்றது

யுத்த களங்களில் முக்கிய நகர்வுகளை தீர்மானிப்பதற்கான ஒரு புலனாய்வு நடவடிக்கையே இந்த Eaves dropping.

எதிரிகளின் தொடர்பாடலை ஒட்டுக் கேட்பதன் மூலம் அவர்களின் நடமாட்டங்களையும் இழப்புகளையும் அறிந்து கொள்வதற்கான ஒரு திட்டம் இது.

போரியல் மரபுகளில் யுத்த தந்திரோபாயங்களில் ஒன்றாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் இது போர்க்களங்களை தாண்டி வெளியில் அதாவது உங்கள் வீட்டில் நடைபெறும் உரையாடல்களை ஒற்றுக் கேட்கும் அளவிற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளமை தான் இப்போது எழுந்துள்ள பிரச்சினை.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு பின்னர் புஸ்சின் கண்களுக்கு தட்டுப்படும்



அனைவரும் பயங்கரவாதிகளாகவே தென்பட ஆரம்பித்தனர்

(மாண்புமிகு அமெரிக்க அதிபர் புஸ் வீட்டில் முகம் பார்க்கும் கண்ணாடி இல்லாமல் இருப்பதால் உலகின் மிக முக்கிய பயங்கரவாதியை அவர் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை???)

இதனை தொடர்ந்து உள் நாட்டு பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்கள் மேற்கொண்டிருந்தன.

புலனாய்வு அமைப்புக்களின் உறுப்பினர்களின் நடமாட்டங்கள் ஏனைய புலனாய்வு அமைப்பபுகளால் இரகசியமாக கண்காணிக்கப்படும் அளவிற்கு பயம் பற்றிக் கொண்டது

அமெரிக்கர்களுக்கு வரும் வெளிநாட்டு அழைப்புகளும் அமெரிக்காவில் இருந்து வெளிநாடுகளுக் குமேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகளும் இரகசியமான முறையில் ஒட்டுக்கேட்கப்பட தொடங்கின.

இது தான் தற்போது அமெரிக்காவின் புஸ் நிர்வாகத்திற்கு எதிரான கடும் எதிர்பை தற்போது தோற்றுவித்துள்ளது

2001ம் ஆண்டு இறுதி முதல் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்டல் நடவடிக்கையானது கடந்த ஆண்

டில் வெளியானதை அடுத்தே பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது

தனிமனித சுதந்திரத்தை கேள்விக்குறி யாக்கும் வகையிலான அதிகாரத்தை இராணுவ புலனாய்வு பிரிவிற்கு வழங் கியது யார் என்ற கேள்வி அமெரிக் காவில் ஓங்கி ஒலிக்க தொடங்கிவிட்டது

ஒருவன் சிந்திப்பதே மனித உரிமை களில் ஒன்றாக இருக்கும்போது, மனித னது அடிப்படை உரிமைகளில் ஒன்றான பேசுவதற்கான சுதந்திரத்தை அமெ ரிக்கா தற்போது மீறியுள்ளது

இருவருக்கிடையிலான தொலைபேசி உரையாடலை நீதிமன்ற அனுமதிப் பத்திரம் இன்றி ஒட்டுக் கேட்டலானது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என மனித உரமை ஆர்வலர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். ஆனால் நாட்டின் பாது காப்பு கருதி எதையும் செய்ய முடியும் என்றும் யாருடைய உரையாடல்க ளையும் ஒட்டுக் கேட்கும் அதிகாரம் தம க்கு வழங்கப்பட்டுள்ளதாகவம் வழமை போலவே இராணுவ புலனாய்வு பிரிவு அலட்டலான அறிக்கை ஒன்றை வெளி யிட்டிருக்கின்றது ஆனாலும் இதனை ஏற்பதற்கு எவருமே தயாராக இல்லை.

1978ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வெளிநாட்டு புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பான சட்டமூலத்தை (Foreign Intelligence Surveillance Act FISA) தான் புஸ் நிர்வாகம் தனக்கு சாதமகமாக மாற் றியுள்ளது.

ஆனாலும் தொலைபேசி உரையாடல் ஒட்டுக் கேட்டல் நடவடிக்கையானது FISA விதிகளுக்கும் முரணானது என் கின்றனர் சட்ட வல்லுனர்கள்

இதனை அடுத்து பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் தேவைக்கேற்ப FISA மாற்றியமைக்கப்படுவதற்குரிய அதிகா ரம் தனக்கு இருப்பதாக புஸ் அறிவித் துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய புலனாய்வு அமைப்புகளான CIA ஆகியவற்றிற்கு சந்தேகத்திற்கிடமான தொலைபேசி உரையாடல் பதிவுகள் அனுப்பிவைக் கப்பட்டு தனித்தனியாக அவற்றின்மீது விசாரணைகள் மேற்கொள்ளளப்பட்டு வருகின்றன.

இதுவரை 12500 சந்தேக உரை யாடல்கள் விசாரணைகளுக்கு உட்படுத் தப்பட்டிருப்பதாக புள்ளவிபர தகவல்கள் தெரிவித்துள்ளன.

Eves Dropping நடவடிக்கைகளை National Security Agencyயே முன்னெ டுப்பதாகவும் அதன் மூலமாகவே ஏனைய அமைப்புகளுக்கு தகவல் வழங் கப்படுவதாகவும் சில குறிப்புகள் தெரி விக்கின்றன.

இவை வெறும் கண்துடைப்பு கணக் குகள் என்றும் தனது நடவடிக்கையை நியாயப்படுத்த அமெரிக்கா கசிய விட் டுள்ள அறிக்கைகளே இவையென்றும் இன்னொரு தரப்பு வாதிக்கின்றது.

இந்தத் தலையிடி அமெரிக்காவில் இருந்து இலங்கையிலும், இந்தியாவி லும் பரவியிருப்பது தற்போது புதிய வேடிக்கைகளை தோற்றுவித்துள்ளது.

அமெரிக்கா தனது பாதுகாப்பிற்காக இதனை செய்கின்றது என்றால் இங்கு விடயமே தலைகீழாக மாறியுள்ளது

ஒரு சிலர் தமது தனிப்பட்ட



தேவைகளுக்காக Eaves dropping நடவ டிக்கையில் ஈடுபட்டுள்ள தகவல் பலரை யும் வியப்பில் ஆழத்தியுள்ளது

இந்தியாவின் முக்கிய அரசியல் வாதிக ளின் தொலைபேசி உரையாடல்கள் தனியார் உளவு நிறுவனம் ஒன்றால் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளன.

இதற்கென பெரும் தொகை பணம் கைமாறியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்திய சமாஜ்வாதி ஜனதா கட்சின் செயலாளர் அமர்சிங் என்பவரின் தொலைபேசி உரையாடலே ஒற்றுக் கேட்கப்பட்டுள்ளது. ஒற்றுக்கேட்கப்பட்டு அவரது உரையாடல் பாதுகாப்பு தொடர் பானதோ தேசிய நலன் சாந்ததோ அல்ல ஆனால் விசயம் கொஞ்சம் கிளு கிளுப்பானது

அமர்சிங் தனக்கு நெருக்கமான நடி கைகளுடனும் பெண்களுடனும் நடத்திய சில்மிஷ உரையாடல்கள் தான் பதிவு செய்யப்பட்டுள்ளதான தெரிகின்றது. அதைவிட சில முக்கிய வர்தக பிரமுகர் களுடன் நடைபெற்ற பேரம்பேசலும் இதில் உள்ளடங்கியுள்ளது

இதில் உள்ள பிரச்சினை என்ன வென்றால் அமர்சிங்கின் தொலைபேசி உரையாடல் யாருக்காக ஒட்டுக் கேட்கப் பட்டுள்ளது என்ற விடயம் இது வரை வெளிவராமல் இருப்பதுதான்.

அயல் நாட்டைப் புறம்தள்ளிவிட்டு நம் நாட்டுப் பக்கம் திரும்பினால் Eaves dropping ஒரு துணையின் பேச்சை பதி வாக்கியிருக்கிறது. வலையில் சிக்குண் டவர் வேறு யாருமல்ல இங்கையின் முப்படைகளின் கட்டளை அதிகாரி தயா சந்தகிரி.

முப்படைகளின் கட்டளை அதிகாரி என்ற வகையில் தனக்கு கீழுள்ள படை அதிகாரிகள் முப்படைத் தளபதிகள் அடங்கலாக தனக்கு அடிபணிகின்ற வர் களாக இருக்க வேண்டும் என்ற நினைப் பில் அவர் வெளியிட்ட Statement இப் போது அவருக்கு எதிராக திரும்பியிருக் கின்றது.

இராணுவ ரகசியங்கள் வெயியே கசிவதை தாம் ஊர்ஜிதப்பத்தி விட்டதாக கட்டளை அதிகாரி கடுமையாக எச்சரித் திருக்கிறார். அவருடைய அறிக்கையில் Eaves dropping உதவியில் இராணுவத் தளபதி உள்ளிட்ட பலரின் உரையா டல்களை ஒட்டுக்கேட்டதன்மூலம், இராணுவத் தகவல்கள் வெளியாருடன் பகிர்ந்துகொள்ளப்பட்டமை தெரிய வந்த தாக அவர் கூறினார். கெட்டது துணை யில் அவரது எச்சரிக்கை.

அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக வெடித்துக் கிளம்பியிருக்கின்றது தயா சந்தகிரி கிணறு வெட்டப்போக பூதம் புறப்பட்டுவிட்டது. அது எப்படி முக்கிய படை அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை கட்டளை அதிகாரி ஒற்றுக் கேட்கலாம் என்று ஒரே குரலில் முப்படைத்தளபதிகளும் ஏனைய படை அதிகாரிகளும் கேள்வி எழுப்பி இருக் கிறார்கள் ஆடிப்போயிருக்கின்றாராம் பாவம்.

ஏற்கனவே ஆயுதக் கொள்வனவு ஊழ லில் சிக்கியிருப்பவருக்கு இதெல் லாம் தேவைதானா என்று கேட்கின்றனர் சிலர்.

What to do? எல்லா விசயத்திலும் இல்லாவிட்டாலும் சிலவாற்றிலாவது அமெரிக்காவை Follow பண்ணினால் கௌரவம் தானே.

என்று நினைத்திருப்பார்.. கான மயில் ஆடட்டும், வான் கோழி ஏன்கிளப்புவான்.

# என்று தணியும் இந்தக் கொலை மோகம்?

சுவிஸ்-பாசல் நகரிலிருந்து ஏ.ஜே.ஞானேந்திரன்



விலைமதிக்க முடியாத மனித உயிர்கள் இன்று செல்லாக்காசாகி விட்ட னவா?

ஏன் மனிதன் மனிதனுக்கே எதிரியாகி, மனிதனை மனிதனே கொல்லும் கேவலம் நம்மைச் சுற்றி நடந்து வருகின்றது?

ஒருவனுக்கு தன் உயிரைப் பறிக்கக்கூட உரிமையில்லை என்ற நிலையில், அவனால் எப்படி இன்னொரு உயிரைப் பறிக்க முடியும்?

நாம் மனிதர்களைக் கேவலப்படுத்த நினைத்துக் கொண்டு, நாயே, கழுதையே குரங்கே என்றெல்லாம் மிருகங்களின் பெயர்களைத் துணைக்கழைத் துத் திட்டித் தீர்க்கிறோமே. ஆனால் நாம் இந்த மிருகங்களை விடக் கேவலமானவர்களாகிக் கொண்டிருக்கின்றோம் என்ற நிஜம் நமக்குத் தெரிந்திருக்கின்றதா? தனக்குப் பசித்தால் மாத்திரம் இன்னொரு மிருகத்தைக் கொல்வது விலங்கின் சுபாவம். பழிதீர்க்கும் வைராக்கியத்துடன், கழுத்தை அறுப்பதோ அல்லது குடலை உருவி எடுக்கும் வெறியோ அதனிடம் இல்லை. தன் குட்டிக்கோ தனக்கோ ஆபத்து வருகின்றது என்று அது திடமாக நம்பும் போது மாத்திரம் அது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, தன்னை நெருங்கும் மிருகத்தை எதிர்த்துப் போராடத் தொடங்குகின்றது.

அவ்வளவுதான்.

ஆனால் மனிதன் அப்படியா நடந்து கொள்கிறான்?

வெகு சுலபமாகக் கிடைக்கக் கூடிய நவீன ஆயுதங்கள், இவன் கொலை வெறிக்கு நன்றாகவே கைகொடுத்து வருகின்றன. எல்லாவற்றிற்கும் ஆசைப்படும் பேராசைத்தனம், பெண்களின் உடல் மீது கொள்ளும் காமம், தன்னை விட மற்றவன் உயர்ந்து விட்டானே என்ற பொறாமை, சாதி, மத வெறி என்று இவன் பல காரணிகளால் புத்தி பேதலித்து, இன்னொரு உயிரை வாங்கு மளவிற்கு வெறியனாகி விடுகின்றான். ஓசைப்படாமல் ஒருவர் தலையில் ரவையை நுழைத்து, உயிரை வாங்கும் அவன், சுலபமாகத் தப்பியோடியும் விடுகின்றான். சட்டத்தின் கண்களில் விரல்விட்டு ஆட்டுமளவிற்கு அவன் பணபலம் உதவிவிடுவதால், சிரமம் அதிகமின்றி , அதன் பிடியில் இருந்து மீண்டு,, அடுத்த கொலைக்கும் தன்னைத் தயாராக்கிக் கொள்கின்றான்.

தனி மனிதன் மட்டும் கொலைகாரன் என்று முத்திரை குத்தப்பட்டால் பரவாயில்லையே. இன்று பல உலக நாட்டு அரசுகளும் கொலைகாரர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டு. பல உலக அமைப்புகளின் கண்டனங்களுக்கு ஆளாகி வருகின்றன. குற்றவாளிகளை மரண தண்டனைக்கு உள்ளாக்குவது, வேண்டப்படாத ஒன்று என்று போர்க் கொடிகள் உலகெங்கும் எழுப்பப்படு கின்றன.

கொலைக்குக் கொலைதான் தீர்வா?

வேண்டாம். வேண்டவே வேண்டாம். இந்தக் கொலைகள் வேண்டாம் என்று உலகளாவிய ரீதியாக எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன.

மனித உரிமைகளுக்காக பெரிய அளவில் போராடுவதில், Amnesty International என்ற அமைப்பே முன்னிற்பதை பலரும் அறிவார்கள். இந்த அமைப்பின் சமீபத்திய அறிக்கையின் படி, உலகெங்கும் , 2004ம் ஆண்டில், மொத்தம் 25 நாடுகளில், 3794 பேர் வரையில் மரண தண்டனை வழங்கி, சம்பந்தப்பட்ட அரசுகளால் கொல்லப் பட்டுள்ளார்கள் என்று தெரிய வந்துள்ளது. இந்தத் தொகையில், குறைந்த பட்சம் 3400 பேர் ஒரு நாட்டில் கொல்லப் பட்டிருக்கின்றார்கள் என்று அதிர்ச்சியான ஒரு தகவலை இது மேலும் தருகின்றது.

அது எந்தக் கொலைகார நாடு?

இன்று பொருளாதார ஜாம்பவானாக, பீறு நடை போட்டுக் கொண்டிருக்கும் வல்லரசு நாடான சீனாதான் அந்த நாடு.

இரண்டாவது இடத்தைப் பிடித்தி ருப்பது ஈரான். இங்கு கடந்த ஆண்டில், 159 பேரளவில் மரண தண்டனை பெற்றி

# மொட்டவிழ்தல்

வானமும் பூமியும்
பொழிகின்ற புன்னகையை
உள்வாங்கி நனைந்து கொள்ள
இன்னும்
தெளிவதாயில்லை மனம்

அள்ளி அப்பி
அலங்கரிக்கப்பட்ட
பிரேதம்போல்
உப்பிக் கிடக்கிறது
முகம்

புற்களும் புள்ளினமும்
பூக்களோடு சேர்ந்து
மலர்வதை
நீ பார்க்கவில்லையா!

காற்றின்
ஒரு
சின்ன அசைவுக்கும்
என்னமாய் அசைந்து
ஆனந்திக்கின்றன
அந்த இலைகள்

நீ மட்டும்
எங்கிருந்துதான்
அந்த
இரும்புச் சங்கிலியை
எடுத்து வந்தாயோ...!

மனத்தையும்
முகத்தையும்
இறுக்கமாய்
கட்டிப்போட

ஓ... நீ...
சிறப்பு விலங்கென்பதால்
கண்களில் காதுகளில்
உதடுகளில்
ஏன் உள்ளத்திலும் கூட
விலங்கோடு திரியத்தான்
விருப்பப்படுகின்றாயோ...!


இறுகி இறுகியே...
கடைசியில்
பொருக்குகளும்
வெடிப்புகளும்
விழுந்த கற்களாலாய்...!

வேண்டாம்
விடுபட்டு வா...!
நூறாங்கள்
இறக்கை விரிப்போம்...!

**சடாகோபன்...**

ருக்கலாம் என்று கூறும் இந்த அமைப்பு. மூன்றாம் இடத்தில் வியட்னாமும், அடுத்த இடத்தை அமெரிக்காவும் பிடித் துள்ளன என்று சுட்டிக்காட்டி இருக் கின்றது.

25 வருட இடைவெளியின் பின்பு, கடந்த வருடத்தில்தான் அதிகமானவர் கள் மரண தண்டனை பெற்றிருக்கிறார் கள் என்ற தகவலையும் இந்த அமைப்பு அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.




ஆனால் இதுவல்ல உண்மையான தொகை. பலர், பல நாடுகளில் மிக இரகசியமாக, மரண தண்டனையைப் பெற்று வருகின்றார்கள். காதும் காதும் வைத்தாற்போல இது நடந்து முடிவதால், அலுவலகரீதியாக, உண்மையான தொகை வெளிவருவதேயில்லை என்று குட்டை உடைக்கின்றது இந்த அமைப்பு.

உலக நாடுகளின் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகி வரும் சீனா, மரண தண்டனைத் தீர்ப்புகளை மீளாய்வு செய்ய முடிவெடுத்திருப்பதாக, அண் மையில் அறிவித்துள்ளது. சுப்ரீம் நீதிமன்றம் என்று சொல்லப்படும், அதி உயர் மட்டத்திலுள்ள சீன நீதிமன்றம், மரண தண்டனைத் தீர்ப்புகளை மீளா ய்வு செய்யும் அதிகாரத்தை மீளப் பெற்றிருக்கின்றது. எனவே மரண தண்டனைகள் சீனாவில் ஒழிக்கப்படாவிடினும், வழங்கப்பட்ட மரணதண்டனையைக் குறைக்கவோ நீக்கவோ இனி அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. இது தனக்குக் கீழ் பணிபுரிய, மூன்று கிளை நீதிமன்றங்களை உருவாக்க இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இனி என்ன மாற்றம் வரும்? பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதைதானா அல்லது புதுக் குருடியின் கதையா? காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

இன்றைய நிலையில், உலகின் 193 நாடுகளில், 124 உலக நாடுகள், மரண தண்டனை வழங்குவதை அடியோடு நிறுத்தி உள்ளன. கடந்த ஒரு தசாப்த காலத்தில், வருடத்திற்கு மூன்று நாடுகளென, வரிசை வரிசையாக, உலக நாடுகள் மரண தண்டனை வழங்குவதை அடியோடு நிறுத்தியிருக்கின்றன என்று நிம்மதிப் பெருமூச்சோடு இந்த அமைப்பு கூறுகின்றது. என்றாலும் அரசி யல் கிளர்சசிகளை அடக்கும் நோக்கு டனும், அரசியல் எதிரிகளின் கதையை முடிக்கவும், சமூக விரோதிகளை ஒழிக்கவும், மரண தண்டனை வழங்குவதை, இன்றும் பல நாடுகள் உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

இளம் பிராயத்தினருக்கு மரணதண்டனைகள் வழங்கப்படுவதற்கு, இந்த அமைப்பு ஓங்கிக் குரல் கொடுத்ததில் வெற்றி கண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். 2000மாவது ஆண்டிலிருந்து அமெரிக்கா, கொங்கோ குடியரசு, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நான்கு நாடுகளுமே இளையோர்க்கு மரண தண்டனை- அதாவது 18 வயதுக்கு உட்பட்டோருக்கு மரண தண்டனைகள் வழங்கி வந்துள்ளன. பாகிஸ்தான் அண் மையில் வெளியிட்ட அறிக்கையில், இளையோர்க்கு மரணதண்டனை வழங்குவதை அடியோடு நிறுத்தி இருப்பதாக அறிவித்திருந்ததால், நான்கு நாடுகள் இப்பொழுது மூன்றாகக் குறைந்துள்ளன.

பெரிய அளவில் மரண தண்டனைகள் இடம்பெறும் சீனாவின் நிலைபற்றி, இங்கே சற்று அலசுவது அவசியமாகின்றது.

இங்கு மரண தண்டனைகள் பொதுவாக, பிரிவினைவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களுக்கும், வறுமைக் கோட்டில் இருப்பவர்களுக்குமே வழங்கப்பட்டு வருவதாக ஒரு குற்றச்சாட்டு சீனாவின் மீது முன்வைக்கப்பட்டுள்ளது.

இது நிஜந்தானா?

மரண தண்டனைக்குரிய குற்றங்கள் தானா என்பது இங்கே நோக்கப்படுவதில்லை. அரசியல் சூடுபிடிக்கும் காலங்களில், மரண தண்டனைகள் சாதாரண குற்றங்களுக்கும் வழங்கப்பட்டு விடுகின்


றன என்றே சொல்லப்படுகின்றது. **பலமாகத் தாக்கு** என்ற ஒரு கொள்கையின் அடிப்படையில், அரச இயந்திரம், இப்படியான தருணங்களில் செயற்பட ஆரம்பித்து விடுகின்றதாம். அலுவலக ஊழியர்களுக்கு வழங்கப்படும் மரண தண்டனைகள், ஊழல் எந்த அளவுக்கு மோசமானது என்பதை வெளிச்சம் போட்டுக் காணபிக்க, இவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. தேசீய விடுதலை தினங்களிலும், சீனப் புத்தாண்டு தினத்திலும் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவது, சீனா எந்த அளவுக்கு பொதுஜனத்திடையே பகிரங்கமாக ஒரு பீதியை எழுப்ப முயல் கின்றது என்பதை பறைசாற்றுகின்றது.

அடிக்கடி இங்கு இடம்பெறும் **பலமாகத் தாக்கு** என்ற அரச பிரச்சாரத்தில், பெரிய அளவில் பலர் கைதாகி, பெரிய தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். ஆயிரக்கணக்கான கைதுகள் இடம்பெறுவதோடு, வழமையான காலத்தில் அளிக்கப்படும் தண்டனைகளை விட, மோசமான தண்டனைகள், கைதாகுபவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்படித்தான் ஏப்ரல் 11ம் திகதி, 2001ம் ஆண்டு பெரிய அளவில் பலர் கைதாகிய சமயம், ஒரே தினத்தில் 89 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இப்படியான காலங்களில், தமக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளை எதிர்த்து விண்ணப்பிக்கவும் எவருக்குமே வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. பல நிரபராதிகள் கொல்லப்படுகின்றார்கள். எந்த வித முன் அனுமதியும் இன்றி, கொல்லப்பட்டவர்களின் உடல் உறுப்புகள் பல அகற்றப்பட்டு, மருத்துவமனைகளுக்கு சூடோடு சூடாக அனுப்பி வைக்கப்பட்டுவிடுவதுண்டு என்ற திடுக்கிடும் தகவலையும் இந்த அமைப்பு நமக்கு தருகின்றது.

பல்வேறுபட்ட முறைகளை உலக நாடுகள், மரண தண்டனை அளிக்க, வழமையில் கொண்டுள்ளன... ஒரு மரக் குத்தியில் தலையை வைத்து அழுத்தி, நீண்ட கூரிய வாளால் தலையைத் துண்டாடுவது தொடக்கம், மின்சார நாற்காலியில் பிணைத்து, அளவுக்கு மீறிய மின்சார சக்தியை உடலுக்குப் பாய்ச்சிக் கொல்வது வரை இது நீள்கின்றது.

நுழைக்கப்பட்ட தலைக்கு மேல் அதி எடைகொண்ட உருக்குக் கத்தியை விழ வைத்து தலை துண்டாடப்படும், பிரான்ஸ் நாட்டு மரண தண்டனை முறை உலகப் பிரபல்யம் வாய்ந்தது. இந்த முறை 1981இல் ஒழிக்கப்பட்டு விட்டது. Guillotine என்று இந்த கொலை இயந்திரம் அழைக்கப்பட்டு வந்தது. தூக்கிலிட்டோ அல்லது வாளால் தலை யைக் கொய்தோ மரண தண்டனை வழங்கும்போது, தண்டனை பெறுபவன் நீண்ட நேர வேதனை அனுபவிக் கின்றான். எனவே உடனடியாக அவன் உயிர் போய்விடவேண்டும் என்பதற்கா கவே இந்த முறையை ஏப்ரல் 25, 1792இல் பிரான்ஸ் நாட்டில் அறிமுகம் செய்தார்கள்.

பிரெஞ் நாட்டவர்கள் இப்படி நினைக்க, இதற்கு முற்றிலும் மாறாக, கொல்லப்படுபவன் நன்றாக வேதனைப் படட்டும் என்று அதனைக் குரூரமாய் ரசித்தவர்களும் அப்பொழுது இருந்திருக்கிறார்கள். ஏதென்ஸ் நகரில், முன்னொரு காலத்தில், செம்பால் செய்யப்பட்ட ஒரு ஆளுயரப் பாத்திரத்தின் ஒரு பக்கக் கதவைத் திறந்து அதற் குள்,



குற்றவாளியைப் பூட்டி வைத் தார்கள். பின்பு உயரமாக நிறுத்தி வைக்கப்பட்ட அந்தப் பாத்திரத்தின் அடியில் தீமூட்டுவார்கள். பாத்திரம் மெல்ல மெல்லச் சூடேறி, உள்ளே அடைபட்டவன் சூட்டில் வெந்து துடித்து, மரணக் கூச்சல் எழுப்பி உயிரை விட்டு விடுவான்.. **Perillos** என்பவன்தான் அப் பொழுது ஆட்சியில் இருந்தவன். இவன் தான் இதை அறிமுகம் செய்து, இப்ப டிக் கொல்லப்படுபவர்களின் பரிதாப மான கூச்சலைச் செவிமடுத்து ரசித்த வன். ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்பார் களே. பின்பொரு காலத்தில் இவன் ஆட்சியில் இருந்து தூக்கியெறியப் பட்டபோது, இதே பாத்திரத்தில் இவ னையும் அடைத்து கொன்றார்களாம்.

இப்படியாக, மரண தண்டனை என்ற பெயரில், குற்றவாளிகளுக்கு நடந்த கொடுமைகள் அளப்பரியன. அதைப் பட்டியலிட்டால், அது ஒரு பெரிய புத்தகமாகவே நீளும்.

இன்று உலகம் நாகரீகமான ஒன்றாகி விட்டதில் பல மிருகத்தனமான நிகழ்வுகள் பழைய கதைகளாகி விட்டாலும், இன்றும் இரண்டு கால்களோடு நம்மைச் சுற்றி நடமாடும் மிருகங்கள், காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

கொலைக்குக் கொலை தீர்வல்ல என்பதை உலகம் நன்றாகவே இப்பொழுது அறிந்திருக்கின்றது. என்றாலும் அது முற்றாக வேரோடு களையப்படாத வரை, மனித நேயம் நேசிக்கப்பட வாய்ப்பேயில்லை.

என்று தணியும் இந்த கொலை மோகம்? என்று அழியும் இந்தக் கொல்லும் தாகம்?

**Message Box**

அமெரிக்கா தனது இராணுவத்தினருக்காக விசேட விமானங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஒருவர் மட்டும் பயணம் செய்யக் கூடிய இந்த விமானம் உலங்குவானூர்தி போல் மேலெழும் திறன் கொண்டது இராணுவ வீரரின் முதுகில் இணைக்கப்பட்டுள்ள வெளி இணைப்பு இயந்திரத்தினால் இது இயக்கப்படும். அமெரிக்க இராணுவம் போர்க் களங்களுக்கு தமது படைகளை கர்த்துவதற்கு இத்தகைய தனிநபர் விமானங்களை பயன்படுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை. இனி அமெரிக்க இராணுவம் பறந்து பறந்து சுடலாம்

வியூகம் சஞ்சிகைக்கு
விளம்பர முகவர்கள்
மற்றும் விநியோகஸ்தர்கள்
வேண்டப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு
0094 777563891

# யூரோவிற்காக பலிகொள்ளப்படவுள்ள அடுத்த இலக்கு

ஈரானை ஒரு கை பார்த்து விடுகின்ற முடிவோடுதான் அமெரிக்கக் கூட்டணி அடாவடித்தனம் பண்ண ஆரம்பித்து இருக்கின்றது. அடிப்பதென்ற முடிவுகளுக்குப் பிறகுதான் இந்த உரசல்கள் எல்லாமே! ஈரானை எங்கே தாக்குவது - எப்படி தாக்குவது என்கின்ற அனைத்து விதமான இரகசிய திட்டமிடல்களும் அமெரிக்கா தலைமையில் நிகழ்த்தப்பட்டாயிற்று.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது அணு உற்பத்தித்திட்டத்தை ஈரான் மீண்டும் ஆரம்பித்தமையை மட்டும் கண்டிக்கும் பொருட்டு அமெரிக்கக் கூட்டணி இவ்வாறு வெகுண்டெழுந்துள்ளது என்கின்ற புஷ்ஷின் கூற்றை அவர் வீட்டு செல்லப்பிராணி கூட நம்பாது! காரணம் ஈரானை தனது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர அமெரிக்க முனைவதற்கான காரணம் வேறாகவும் இருக்கிறது அல்லது இருக்கின்றன.

அமெரிக்கக் கோட்பாடுகளோடு சில தசாப்தங்களாக மிகவும் அதிகமாகவே முரண்பட்டுவருகின்ற ஈரானை நான்கு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளிப்படையாகவே மிக மோசமாக வர்ணித்திருந்தார்! வடகொரியா மற்றும் ஈராக்குடன் சேர்த்து ஈரானை தீய நச்சு நாடுகளின் ஓர் அங்கமென்று சாடியிருந்தார் ஜுனியர் புஷ்

இதேசமயம் ஈரானின் எண்ணை வயல்கள்மீதான கட்டுப்பாட்டை வென்றெடுப்பதும், அந்தப் பிரதேசத்தில் தனது அதிகாரத்தை நிறுவுவதும் அமெரிக்காவின் நீண்டகால இலக்காக இருந்து வந்திருக்கிறது. ஈரானை தனது பிடிக்குள் கொண்டுவர வேண்டும் என்கின்ற தற்போதைய அமெரிக்க அவசரத்திற்கு வேறும் பல காரணங்கள் உண்டு.

உடனடியாக ஈரான் மீது அமெரிக்க தாக்குதல் நடத்த முற்படுவதற்கான பிரதான காரணி பெற்றோ யூரோ (Petro – Euro) என்பதுதான் என சர்வதேச பொருளியல் வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

1970களில் ஒபெக் நாடுகளில் பெற்றோலை டொலரில் விற்பனை செய்வதற்கு ஒப்புதல் தெரிவித்திருந்தன. எண்ணை வயல்கள் நிறைந்த அரேபிய உற்பத்தி உலகச் சந்தையில் டொலரின் பெறுமதியிலேயே விற்பனையானது. இதற்கான சர்வதேச சந்தைகள் அமெரிக்காவிலும், லண்டனிலும் மையம் கொண்டிருந்தன. தற்பேது எழுந்திருக்கும் சர்வதேச சிக்கலுக்கான அடிப்படைக் காரணியாகத் தெரிவது, ஈரான் தனது ஏற்றுமதியை யூரோ நாணயத்தில் விற்க முடிவு செய்திருப்பதுதான். ஈரானின் இந்த முடிவானது, சர்வதேச நாணயமாக இருந்துவரும் டொலர் சந்தித்துக்கொண்டிருக்கும் சரிவுகளின் மற்றுமோர் மிகப்பெரும் தாக்குதலை உண்டுபண்ணக்கூடும். இதுவே அமெரிக்கா தற்போது கொண்டிருக்கும் ஈரானுடனான முறுகல் நிலையின் அடிப்படைக் காரணியென்று வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.




அமெரிகாவிலும் அதன் நேச நாடுகளிலும் செல்வாக்கு பெற்றிருந்த டொலரின் பெறுமதி யூரோவின் வருகைக்கு பின்னர் மெதுமெதுவாகச் சரியத் தொடங்கியது

இதனால் 2003ம் ஆண்டு முதல் ஈரான் தனக்கான கொடுப்பனவுகளை உலக நாடுகள் யூரோவில் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றது

எண்ணெய் வியாபரத்தை யூரோவில் நடத்தும் திட்டம்தான் அமெரிகாவிற்கு மத்திய கிழக்கு நாடுகள் மீது ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றது

குறிப்பாக அமெரிக்காவின் எண்ணெய் வியாபரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் புஷ் குடும்பத்திற்கு இந்த திட்டம் பெரும் தலையிடியாக உருவாகியுள்ளது

ஏற்கனவே வறிய நாடுகளுக்கு இணையாக சர்வதேச கடனாளியாகியிருக்கும் அமெரிக்காவிற்கு ஆதரவாக இருப்பது எண்ணெய் வளம் ஒன்றுதான்.

சர்வதேச சந்தையில் எண்ணெய் பரல்கள் இதுவரை டொலர் பெறுமதியிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

எண்ணெய் வளம் மிக்க நாடுகள் யுரோவிற்கு மாறினால் அமெரிக்காவின் பொருதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்படும் என்பதோடு டொலரின் பெறுமதி மிகக்கணிசமான அளவிற்கு வீழ்ச்சியடையும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால்தான் அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளில் தனது செல்வாக்கை நிலை நிறுத்தி அவற்றின் திட்டத்தை முறியடிக்க முயற்ச்சிக்கின்றது.

ஏற்கனவே பேரழிவு தரும் உயிரியல் ஆயுதங்களை தயாரித்த வருவதாக குற்றம் சுமத்தி ஈராக்கை ஆக்கரமித்த அமெரிக்கா எண்ணெய் வளத்தை காட்டி

யூரோவிற்கு மாற்ற முனைந்த ஈராக்கை மறைமுகமாக தனது காலனித்துவ நாடாக அல்லது இராணுவ நவகுடி யேற்ற நாடாக? மாற்றியிருக்கின்றது.

அமெரிக்க மிரட்டல்களுக்கு அடிபணியாமல் யுரோவிற்கு எண்ணெய் விற்பனையை மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியதற்காகவே இன்று சதாம் கைதியாக்கப்பட்டுள்ளார்.

ஈராக்கை ஆக்கிரமித்ததன் மூலம் ஒபெக் அமைப்பில் ஈராக்கால் கொண்டு வரப்படவிருந்த யூரோவிற்கு எண்ணெய் விற்பனை செய்யும் திட்டத்தை அமெ

ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு காரணங்களை உருவாக்குவதானது அமெரிக்காவை பொறுத்தவரை கடினமாதல்ல.

தனது அதிகாரத்தின் கீழ் செயல்படும் ஐநா சபையை துணைக்கழைத்து ஈரான் மீது தாக்குதல் நடத்தவதற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றது அமெரிக்கா.

ஈரானுக்கெதிரான அமெரிக்காவின் தாக்குதல் திட்டமொன்றை ஜேர்மன் மற்றும் துருக்கிய ஊடகங்கள் அம்பலப்படுத்தியிருக்கிறது.



ரிக்கா தடுத்தது.

தற்போது ஈரான் அதனை முன்னெடுப்பதால் ஈரானை தாக்க அமெரிக்கா திட்டம் போடுகின்றது இது தான் நிஜம் ஆனால் சொல்லப்படாத நிஜம்.

ஈராக் இனி அமெரிக்காவின் அடிமை என்பதால் அடுத்த இலக்கு மத்திய கிழக்கின் ஈராக்கிற்கு அடுத்து செல்வாக்குமிக்க ஈரான்தான்.

அமெரிக்கா ஏற்கனவே மறைமுகமாக பலமுறை கெஞ்சலாகவும் மிரட்டலாக வும் யூரோவிற்கு எண்ணெய் விற்ப னையை மாற்றும் ஈரானிய திட்டத்தை தடுக்க முயற்சித்தபோதிலும் ஈரான் அதற்கு இடம் கொடுக்கவில்லை

அடுத்த மாதம் எண்ணெய் விற்பனை தொடர்பான தனது தீர்மானத்தை அது அறிவிக்கவுள்ளது.

இந்த அறிவித்தல் வெளியானால் ஈரானை பின்பற்றி ஏனைய அரபு நாடுகளும் யூரோவிற்கு எண்ணெய் வியாபாரத்தை மாற்றி விடும் என்று அமெரிக்கா அச்சமடைவது தவிர்க்க முடியாத துதான்.

அமெரிக்க உளவு நிறுவனமான CIA யின் இயக்குனர் குறோஷிற்கும், துருக்கி பிரதமருக்குமிடையில் இடம் பெற்ற சமீபத்திய பேச்சு வார்த்தையின் போது - ஈரான் மீதான விமானத் தாக்குதலுக்குரியதொரு சாத்தியம் பற்றி கலந்துரையாடப்பட்டதாக ஜேர்மனின் செய்தி நிறுவன அறிக்கையொன்று கூறுகிறது! இந்த தாக்குதல் மாச் மாதம் நடைபெறும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

அதாவது யூரோவிற்கு ஈரான் மாறி னால் அதற்கு ஈரான் கொடுக்கபோகும் விலை இது.

இங்கு முக்கியம் என்னவென்றால் அமெரிக்கா ஈரான் மீது வீசப்போகும் குண்டு அணுகுண்டாக இருக்கலாம் என்று எழுந்துள்ள சந்தேகம் தான் ஏறத்தாள 450 தாக்குதல் இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன இவற்றில் சில அணு உற்பத்தியாலைகள் இவை நிலத்திற்கு கீழ் மிக ஆழமான பகுதியில் அமைந்துள்ளதால் இவற்றை சாதாரண குண்டுகளால் அழிக்க முடியாது என்பதால் அமெரிக்காவின் தெரிவு அணு குண்டுகள் தான் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஆமெரிக்க விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்ட அதி சகதிவாய்ந்த அணு குண்டொன்றை அமெரிக்கா ஈரான் மீது வீசலாம் என்று புலனாய்வு தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆயினும் இந்த விமானத்தாக்குதல் திட்டம் குறித்து வெளியான செய்திகளை அமெரிக்க மற்றும் துருக்கிய தரப்புக்கள் மறுத்தொதுக்கி விட்டிருக்கின்றன.

இதேவேளை ஈரானின் அணுநிலையங்கள் இருப்பதாக கருதப்படும் மையங்களை, சிறப்புப் போர் விமானங்கள் மூலம் தகர்ப்பதற்கான இஸ்ரேலின் தாக்குதல் திட்டமொன்றும் வெளிக்கசிந்துள்ளது. இந்த விடயத்தை பிரித்தானியாவின் Sunday Times பத்திரிகை வெளிப்ப டுத்தி இருக்கிறது. இஸ்ரேல் இராணுவத்துக்குள்ளே இருக்கும் வட்டாரமொன்றை ஆதாரம்

## Message Box

இங்கிலாந்தில் வைத்தியர்களும் சட்டத்தரணிகளும் சம்பாதிக்கும் பணத்தைவிட வாகன திருத்துனர்கள் அதிகம் சம்பாதிப்பதாக தெரிய வந்துள்ளது

பிரித்தானியாவில் மேற்கொள்ளப் பட்ட கருத்துக் கணிப்பின் போது வாகன உரிமையாளர் ஒருவர் ஏறத்தாள 100 பவுன் பணத்தை ஒருமணி நேர வாகனத் திருத்த வேலைக்கு செலவிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானிய பிரஜை ஒருவர் தனது நலன்களை பேணுவதற்கு செல விடும் தொகையை விடவும் கூடுதலான பணத்தை வாகனப் பராமரிப்பிற்கு செலவிடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

பிரசுரமாகியி ருக்கும் அந்தச் செய்தியில், குறித்த தாக்குதல் திட்டம் மிக உயர்ந்த கட்டத்திற்கு வந்துள் ளதாகவும் கூறப்படுகிறது.



இதேவேளை கடந்த மாதம் ஏரியல் ஷெரோனின் முன்னாள் கட்சியான இஸ்ரேலின் லிக்குட் கட்சி அங்கத்தவர்கள் நடத்திய மாநாடொன்றில் "காலம் கடக்கும் முன் ஈரானின் அணு உலையை குண்டு வீசி தாக்க வேண்டும்" என்று தீர்மானித் ததாகவும் தெரிவிக்கப்படுகிறது! "அணு சக்தி ஆற்றல் கொண்ட" ஒரு ஈரானை தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இஸ்ரேல் எடுக்குமென்று தற்போது கோமா நிலையிலிருக்கும் இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் ஏரியல் ஷெரோன் முன்பொரு தடவை எச்சரித்திருந்தமையும் இங்கு ஞாபகிக்கத்தக்கது.

இஸ்ரேலின் தாக்குதல் திட்டம் முற்று முழுதாக அமெரிக்க துணையுடன் தயாரிக்கப்பட்ட திட்டம் தான் என்பதை நாங்கள் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா சொல்லும் காரணம், ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றது எனவே அதனை தடுப்பதற்கு ஈரான் மீது தாக்கு தல் நடத்தவதைதவிர வேறு வழியில்லை என்பது அமெரிக்க வாதம்.

தன்னையும் தனது நேச சக்திகளையும் தவிர வேறு எவரும் அணு ஆயுதங்களை கொண்டிருக்கக்கூடாது என்ற அமெரிக்கனிச கொள்கையின் வெளிப்பாடுதான் இது.

ஆனால் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் கீழ் - மென்முறையிலான அணுக்கரு ஆற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஈரானுக்கும் உரிமை உண்டு. என்றாலும் அத்தனை விதமான அணுக்கரு செறிவூட்டல் நடவடிக்கை களையும் ஈரான் நிறுத்தியேயாக வேண்டும் என அமெரிக்கா தனது ஐரோப்பிய வல்லரசுக ளோடு சேர்ந்து சண்டித்தனம் செய்கிறது. இதை சண்டித்தனம் என்பதைவிட பயத்தால் உந்தப்பட்ட எழுச்சியென்றும் கூறலாம்.

1968ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது அணு ஆயுத பரவல் தடுப்புச் சட்டம்! இந்த சட்டத்தின் படி அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய ஐந்து வல்லருசுகள் மட்டும் அணு ஆயுதங்களை வைத்திருக்க முடியும். ஆனால் அந்த அணு ஆயுதங் களையோ அவற்றைத்தயாரிக்கும் நுட் பங்களையோ ஏனைய நாடுகளுக்கு கொடுக்க முடியாது. இருந்தா லும் ஏனைய நாடுகள் அணுக்க ருவைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்ய லாம் என்கிறது இந்த சட்டம் ஆனாலும் அவ்வாறு அணு மின் உற்பத்தி செய்ய முனையும் ஏனைய நாடுகள் சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவ னத்தின் மேற்பார்வையுடனேயே தமது நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும்.



இதன்படிதான் ஈரான் தனது அணுசக்தி செயற்பாடுகளை ஆரம்பித்தது. பின்னர் சர்வதேச வேண்டுகோள்களுக்கிணங்க அந்த நாடு கடந்த இரண்டரை யாண்டுகளாக தனது செயற்பா டுகளை நிறுத்தி வைத்தி ருந்தது. ஆனால் மீண்டும் தனது அணு சக்தி சம்பந்தமான செயற்பாடுகளை ஆரம்பிக்கப் பபோவதாக கடந்த ஜனவரி மூன்றாம் திககதியன்று ஈரான் தெரிவித்திருக்கிறது.

யுரேனியத்தை செறிவு படுத்துவதன் மூலம் அணு மின்சாரத்தினை பிறப்பாக் கம் செய்யலாம். ஆனால் அதே யுரேனி யத்தை சற்று அதைவிட வலுவாக செறிவூட்டினால் அதுகொண்டு அணு ஆயுதங்களை உற்பத்தியும் செய்யலாம்! இதுதான் அமெரிக்கா உலகை சமாதா னப்படுத்த சொல்லும் காரணம்.

ஈரான் மின் உற்பத்திக்கு யுரேனியத் தைச் செறிவூட்டுவதாக வெளியுலகிற்கு சாக்குப்போக்கு காட்டிவிட்டு, இங்கே அணு ஆயுதங்களுக்கான செறிவூட் டலை செய்துவிடுமோ என அமெரிக்கா சொல்கின்றது.

சரி அமெரிக்கா கருதுவதுபோல் அல்லது சொல்வதுபோல் ஈரான்அணு ஆயுதங்களை உற்பத்தி செய்தால் என்னவாகும் என்பதையும் ஒருமுறை பார்த்துவிடுவோம்.

ஏற்கனவே அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக ஒரு காலத்தில் இருந்த பாகிஸ்தான், அமெரிக்காவின் ஆசீர்வா தத்துடன் அணு ஆயுதங்களை தயாரித்தது இதற்கு பொறுப்பாக இருந்த பாக் கிஸ்தான் விஞ்ஞானி அப்துல் காதிர்கான் இந்த அணு ஆயுத தயாரிப்பு தொடர்பான தகவல் களை முறையற்ற ரீதியில் ஈரானுக்கு வழங்கியிருந்தார் என்ற விடயம் வெளியாகி யிருந்தது.

ஆனால் இங்கு சொல்லப்படாத விடயம் அணு ஆயுத தயாரிப்பு திட்டம் ஈரானுக்கு மட்டும் தான் வழங்கப்பட்டதா? என்பதுதான் அமெரிக்காவிற்கு இப்போது எழுந்துள்ள மிக முக்கியதான அச்சம் அல்கைடாவிடம் அணு ஆயுதங் கள் உள்ளனவா என்பது பற்றியதுதான்.

ஏற்கனவே பாகிஸ்தானுக்கு அணு ஆயுத தாயரிப்பிற்கு ஆதரவு வழங்கி அதன் மூலமாக ஈரானுக்கும் சிரியா விற்கும் சிலவேளை அப்போதே அல் கைடாவிற்கும் அணு ஆயுத இரகசி யங்கள் கிடைப்பதற்கு அமெரிக்கா மறைமுகமாக துணை போயிருக்கின்றது அல்லது அமெரிகாக வசமாக ஏமாற்றப் பட்டுள்ளது இது அமெரிக்காவிற்கு மிகப் பெரிய அவமானம்தான்.

தான் முட்டாளக்கப்பட்டது ஒரு பறம் மற்றும் தனக்கு எதிரான சக்திகளுக்கு அணு அயுதத் தாயரிப்பு வழிமுறைகள் கிடைப்பதற்குதான் ஒரு காரமாக அமைந்துவிட்ட கசப்பான உண்மையை அமெரிக்காவால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

இப்போது ஈரான் அணு ஆயுத உற்பத் திக்குரிய திறனை கொண்டிருக்குமா னால் சந்தேகம் வேண்டாம் அல்கைடா விற்கு நிச்சயம் அணு ஆயுதம் கிடைத்து விடும்.

அப்படி ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்பே ஈரரின் அணு ஆயுத பலத்தை இல்லாதொழிக்க அமெரிக்கா விரும்பு கின்றது.

இந்த சூட்டையும் முறுகலையும் தணிக் கும் முகமாக ரஷ்யா மாற்றுத்திட்ட மொன்றை முன்வைத்திருந்தது. அதா வது ஈரானின் மின் உற்பத்திக்குத் தேவையான யுரேனியங்களை ரஷ்யா தனது நாட்டில் செறிவு படுத்தி கொடுக்க முடியுமென்று கூறியது. இந்த திட்டத்தை ஆரம்பத்தில் கடுமையாக மறுத்தி ஈரான் தனது அணுத்தேவை நடவடிக்கைகளில் தானே ஈடுபடப்போவதாக பிடிவாதமும் செய்தது. ஆனாலும் - பின்னர் என்ன நினைத்ததோ தெரியவில்லை, ரஷ்யா வின் மாற்றுத்திட்டத்திற்கு பச்சை கொடி காட்டியிருக்கின்றது ஈரான்.

ஆனாலும் அமெரிக்க கூட்டணியினர் விட்டபாடில்லை! ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு ஈரானை குற்றப்படுத்தியே ஆகவேண்டும் என்று அவைகள் மீண்டும் மீண்டும் கொக்கரிக்கின்றன. பதிலுக்கு ஈரானும் சவால் விடுகிறது.

ஈரானுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை வீற்றோ அதிகாரம் மிக்க நாடுகளின் மறைமுக அதரவு.

சீனா ரஸ்யா ஜேர்மனி பிரான்ஸ் ஆகிய ாநடுகள் ஐநா சபையில் ஈரான்மீது ஆதரமற்ற அமெரிக்க குற்றச்சாட்டை எதிர்க்கும் என்று ஈரான் நம்பிக்கை கொண்டுள்ளது.

சிலவேளை இந்த விடயத்தில் யுத்தம் ஒன்று ஈரான் மீது அமெரிக்காவால் திணிக்கப்படக்கூடியதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாமலுமில்லை!

அவ்வாறு ஒரு யுத்தம் ஆரம்பமாகுமி டத்து அமெரிக்காவுக்கு -

ஈரான் - ஈராக்காக இருக்கப்போவ துமில்லை!

ஈரானிய ஜனாதிபதி மஹ்முத் அஹமதி நஜாத் - சதாமாக இருக்கப்போவ துமில்லை!!



## நாட்டு நடப்பு

ஒரு வெள்ளைக் காகம்
தவளையிடம் வந்து
சொல்லியது,
"சொர்க்கத்தில் பெரிய
விருந்து
நடக்கப்போகிறது" என்று.

தவளை தன் வாயைத்
திறந்து, "ஹை
அங்ங்ங்கேயா!" என்றது.

காகம் தொடர்ந்து, "அங்கு
மிகச் சிறந்த உணவும்
பானமும் உண்டு" என்றது.

தவளை மேலும் "ஹை,
அங்ங்ங்ங்கேயா!" என்று
கேட்டது.

காகம், "விளையாடுவதற்கு
உருண்டையான கற்களும்
உண்டு" என்றது.

தவளை மேலும் தனது
வாயை அகலமாகத்
திறந்து "ஹை
அங்ங்ங்ங்கேயா!" என்று
கூவியது.

காகம் சொன்னது,
"ஆனால் பெரிய
வாயுடைய யாரையும்
உள்ளே
அனுமதிப்பதில்லை".

தவளை தனது வாயை
இறுக மூடிக்கொண்டு
முணுமுணுத்தது.

"பாவம் முதலை! ஏமாந்து
விடும்!"

**"நன்றி ஓஷோவின்
குட்டிக் கதைகள்"**

**வியூகம்
த.பெ.எண் 1364
கொழும்பு**



# வெள்ளித் திரைகளை ஊடறுக்கும் சின்னதிரைகள்

■ நாஜி




பொழுதுபோக்கு என்பது- ஓய்வை மகிழ்வோடு கழிப்பதற்கான செயற்பாடுகளின் அடையாளமாகிப் போய்விட் டது.

தனது ஓய்வு நேரத்தை எவ்வாறு சந்தோஷித்துக் கழிப்பது என்பதில் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும். இதற்கான பிரதான காரணிகளில் ஒன்று அவர்களின் மாறுபட்ட ரசனைகளின் தேர்வு எனலாம்.

நமது சாதாரண மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களாகக் காணப்படுபவை அகன்ற திரைச் சினிமாக்களும், சின்னத் திரை சமாச்சாராங்களும் பிரதான இடத்தைப் பிடித்துக்கொள் கின்றன. எதிலும் சுலபமுமான இவற்றின் நுகர்ச்சித் தன்மையே இதற்கான காரணங்களாகும்.

அகன்ற திரையில் சினிமாவை தேடிச் சென்று பார்த்துப் பழக்கப்பட்டுப்போன நமக்கு, அதே சினிமாவை இன்று கழிவறை, குளியலறை வரையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது. ரீ.வி எனப்படுகின்றன (தொலைக்காட்சி) சின்னத் திரைப் பெட்டிகள் தொழில்நுட்ப ரீதியாக இது மாபெரும் சாதனையாகக் கருதப்பட்டாலும், கலாச்சாரம், ஆரோக்கியம் சார்பில் இது வேறொரு தளத்தில் வைத்து விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சினிமா என்பது குறிப்பாக தமிழ் சினிமா என்பது தெருக்கூத்து அல்லது மேடை நாடகத்தின் பரிணாம வளர்ச்சி. புராண கதைகளினூடாக, மதம் வளர்ந் தும், வரலாற்று வடிவங்களினூடாக சுதந் திர எழுச்சியீட்டியும், வந்த தென் இந்தியாவின் ஆரப்ப தமிழ் சினிமா கலாச்சார வடிவங்களாகச் சொல்லப்படுகின்றனவற்றைப் போற்றிக் காக்கும் முயற்சிகளை முன்மொழியாமலும் இல்லை. சினிமா பற்றியும் அதன் இன்றை நிலை பற்றியும் தொட்டுச் செல்லும் இந்தக் கட்டுரையின் வாயி லாக இது சார்பில் நமது பொது ரசனை பற்றியதொரு சுய மதிப்பீட்டிலும் ஈடுபட முயல்கிறேன்.

நமது தமிழ் சினிமா நுகர்வோர்களில், அவர்களின் ரசனைத் தன்மை அடிப்படையில் சில பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

**மலின/கீழ்மட்ட ரசனையாளர்கள்**

தனது ஆதர்ஷ நடிகன் (ஒரு சில வேளைகளின் நடிகை) தோன்றி நடிக்கின்றான் என்கின்ற ஒரேயொரு தகுதிக்காக(?) மட்டுமே படத்தினை

விழுந்து விழுந்து பார்க்கும் கூட்டத்திற் குள் இவ்வகை ரசிகன் சேர்ந்துவிடு கின்றான். இவ்வாறானவர்களையே நாம் மலின/கீழ்மட்ட ரசனையாளர்களாக அடையாளம் காண்கின்றோம்.

ரஜினியின் தத்துவப் பிதற்றல்களும், விஜய்-மற்றும் அஜித் போன்றவர்களின் சிறுபிள்ளைத் தன விரல் அசைவுகளும், அங்கச் சேட்டைகளும் உணர்ச்சிவசப் பட்டு "தலைவா..." என்று கூச்சலிட்டு விசிலடிக்கும் நம்மவர்களை வேறெங்க ணம் அடையாளப்படுத்துவது?

தனது பிரிய நடிகனுக்காக உண்ணா விரதம் இருப்பது, ரசிகர் மன்றம் அமைப் பது, பச்சை குத்திக்கொள்வது மற்றும் தீக்குளிப்பது என்று தென்னிந்தியத்தன அளவுக்கு நமது நாட்டில் நிலைமை மோசமாகி விடவில்லையாயினும், நமது கீழ்மட்ட ரசனையாளர்களின் சமகால முனைப்புக்கள் இங்கும் அவ்வாறான தொரு திரையரங்கின் வெளிப்பகுதியில் விஜய் ரசிகர் மன்றம் என்கிற பெரிலான பதாகையொன்று மிக அண்மையில் தொங்கவிடப்பட்டிருந்தமையை இதற்கு ஒரு உதாரணமாகக் கூறலாம்.

ஆபாச நடனக் காட்சிகளும், இரட்டை அர்த்த வசனங்களும் இந்த மலின ரச னையாளர்களைக் குறிவைத்தே சினி மாவில் உருவாக்கப்படுகின்றன. கதாநா யகனின் இயல்புக்கு மாறான வீர தீரங்கள் இடம்பெறும் காட்சிகளின் போது திரையரங்கின் பகுதிகளிலிருந்து வெகு குதூகலத்துடன் கூடியதொரு கரகோஷம் கிளப்புவார்கள்... குறித்துக் கொள்ளுங் கள். அவர்கள் தான் நாம் பேசுகின்ற அந்த மலின/கீழ்மட்ட ரசனைக் குழுவினர்.

**மேல் நிலை/உச்சப் புள்ளி ரசனையாளர்கள்**

படத்தின் இயக்குனர், ஒளிப்பதிவாளர், வசனகர்த்தா, உருவாக்கல் நிறுவனம் & என்று துறை சார்ந்தோர் பற்றிய அறிதலி



னூடாகவும் அவர்களின் திறமை மீதான நம்பிக்கையிலும் சினிமாவை நுகர முற்படுகின்றதொரு வட்டத்தினை மேல் நிலை ரசனையாளர்களாகக் கொள்ள லாம்.

இவர்கள் கதாநாயகன்/கதாநாயகி போன்ற படிமங்களைப் பின்னிலைப்ப

அத்தனை கலைஞர்களின் பெயர்களும் எழுத்துக்களாகத் திரையில் நகருமே! அந்த எழுத்துக்கள் அனைத்தையும் ஊன்றிப்படிக்கின்ற ஒரு சிலரை அரங் கில் நீங்கள் கவனிக்கலாம். அவர்கள்தான் நமது "மேல் நிலை/உச்ச புள்ளி ரசனையாளர்கள்!"



டுத்தி, படத்தின் நகர்வு, தொழில்நுட்பம், கதை சொல்லும் பாணி போன்ற இன் னோரன்ன இவை சார்பான விடயங்க ளைப் பிரதானப்படுத்தியே காட்சிகளை ரசிக்க எத்தனிப்பர்! மலின ரசனையா ளருக்கு நேர் முரண் தன்மைகளை மிக அதிகமாகக் கொண்ட இவர்களின் உள் வாங்கல்களும், ரசிப்புத் தன்மையும் பல் வேறு சமயங்களி நுணுக்கமும் ஆச்ச ரியம் நிறைந்தவைகளாகவும் அமைந்து விடுவதுண்டு. ரசனைத்தேர்வு அடிப்ப டையில் இவர்களை மேல் நிலை/உச் சப் புள்ளி ரசிகர்களாகக் குறிப்பிடாலாம்.

ஒவ்வொரு காட்சிகளையும் புத்திஜீவித் தனத்துடன் ரசிக்க முனைவார்கள். "அம்மா" நடிகை அழும்போது தானும் விழிகளைக் கசக்கி, கதாநாயகன் சண்டையிடும்போது தானும் உதடுக டித்து ஆக்ரோசப்படுகின்ற "மலின ரச னையாளர்கள்" ளைப்போன்று இவர்கள் எளிதில் உணர்ச்சிகாட்ட மாட்டார்கள்.

ஆரோக்கியமான சினிமாக்களும், மாற்றுச் சிந்தனையோடு வருகின்ற சினிமாக் கலைஞர்களும், ஓரளவேனும் பேசப்படுவதற்கு இவர்களும் காரணமெ னலாம்.

தலைப்பு (Title) காட்டப்படுவதிலி ருந்து படத்துக்காகப் பங்களிப்புச் செய்த

**சாதாரண/இடைநிலை ரசனையா ளர்கள்.**

எவ்விதத் தேர்வுகளுமின்றி இரண்டரை மூன்று மணி நேர சந்தோஷத்துக்காக மட்டும் திர்ரையரங்கு நோக்கிச் செல்லும் வர்க்கத்தினர் இவர்கள்!

ஆனாலும் மலின ரசனைக்கும், மேல் நிலை ரசனைக்கும் இடைப்பட்டதாக இவர்களின் ரசனை வெளிப்படும்! மிக உருக்கமானதும், சில வேளை இயல் புக்கு மாறானதுமான காட்சிகள் நகரும் போது மெய்சிலிர்த்துக்கொள்ளும் இவர் கள் வேறு சில வேளைகளில் உச்சப் புள்ளி ரசனைக்கு மாறிவிடுவதுண்டு.

அனேகமாகக் கதாநாயகன் யார், இயக்குனர் யார் என்று தேர்வு செய்து படம் பார்க்கும் பழக்கமற்ற இவர்கள், படம் பார்த்த பின்னர் சிலவேளை குறித்த படத்தின் ஒரு சில கலைஞர் களைப் பற்றி உன்னிப்பாக விசாரிக்கத் தலைப்படுவார்கள். ஒரு படம் வெற்றிப் படமாக அமையுமா என்பதை இவர்களி டமிருந்து பெறுகின்ற கருத்தறிதலி னூடாகத் தெரிந்துகொள்ளலாம்.

மிகவும் அதிகமான உணர்ச்சி வெளிக் காட்டல்களின்றியும், அதேவேளை ஆழ்ந்த கவனிப்புகளின்றியும் திரையரங் கில் "கொறிதீன்" களோடு காணப்படுப

வர்களே. ஆம், அவர்கள் தான் இந்த சாதாரண/இடைநிலை ரசனையாளர்கள்.

மேற்குறிப்பிட்ட ரசனையாளர் பிரிவின ருக்குள், ஆபத்தானவர்களாகவும், புழுதி படிந்த ரசனைப் புத்திக் காரர்களுமாகக், கீழ்நிலை ரசனையாளர்களே மிக அதிகமாக நம்மால் இனங்காணப்படுகி றார்கள். சினிமா பார்க்கத்திரையரங் குநோக்கி நகர்பவர்களில் பெரும்பான் மையானவர்கள் இவர்கள் தான். எனவே வர்த்தக சினிமாக்கள் இவ்வாறானவர் களைக் குறிவைத்தே வெளிவருவதால் இவர்களின் ரசனையோடு சமரசம் செய்யும் பத்தாம் பசலித்தனமான காட்சி களையும், கதைகளையும் கொண்டவை களாகவே வெளிவருகின்றன.

எதையும் திரைப்படங்களாக வழங்க லாமென்ற சமகாலத்து ஆரோக்கியமற்ற நிலைக்கு இந்த மலின ரசனையாளர்கள் மீது சினிமாக்காரரக்ள் வைத்துள்ள மாறா நம்பிக்கையே காரணமெனலாம்.



சினிமா என்பதை அகன்ற திரைவழியா கப் பணம் பொடுத்தே நுகர வேண்டு மென்ற கட்டுமானத்தை உடைத்தெ றிந்தன. நமது சின்னத்திரைப் பெட்டிகள்! தொலைக்காட்சி அலைவரிகைள் தனியாருக்கும் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவைகளில் விசித்திரமான மாற்றங்கள் பல இடம்பெறலாயின. குறிப்பாககத் தமிழ்மொழி நிகழ்ச்சியாய் இப்போது சின்னத்திரை வழியாக வந்து நம்மையெல்லாம் ஒரு வகையான "கோமா" நிலைக்குக் கொண்டுபோய் வைத்திருக்கும் பெருந்தொடர் நாட கங்கள் (Mega Serials) கவனிக்கப்பட வேண்டியவை.

அநேகமாகப் பெண்களை இலக்கு வைத்து உருவாக்கம் செய்யபடுப வையே இந்தப் பெருந்தொடர் நாடகங் கள்! நமது அலைவரிசைகள் எல்லாவற் றிலுமே இடம்பெறுகின்ற இவ்வாறான நாடகங்களைக் கூர்ந்து அவதானிக் கையில், பொதுத் தன்மையொன்றினை நாம் புரிந்துகொள்ள முடியும்!

அதாவது, ஒவ்வொரு பெண்ணும் செய்து காட்ட வேண்டும் என்று தனக்குள் நினைத்து துடிக்கின்றாள். ஆனால் நடை முறைக்குச் சாத்தியமற்றதான (அல்லது இயல்புக்கு மாறான) காரியங்களை இன்றுள்ள அனேகமான பெருந்தொடர் நாடகங்கள் சின்னத்திரை வழி யாகப் பெண் படிமங்களைக் கொண்டு நிகழ்த்திக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த இயல்புக்கு மாறான நிகழ்வுகள் பெண்களைக் கவர்கின்றன. ஏதோ ஒரு வகையில் அடக்கு தலுக்குள்ளான ஒவ்வொரு பெண்ணும் பெருந்தொடரில் வருகின்ற படிமப்பெண் பாத்தி ரத்தைத் தானாக நினைத்து அதனூடாக தனது உணர்வு களையெல்லாம் தீர்த்துக் கொள்ள முயலுகிறாள். இன்றின் பெருந்தொடர் நாடகங்கள் நமது பெண்களின் குமுறிக் கொண்டிருக்கும் உணர்வுக ளுக்கான மாய வடிகால்கள் எனலாம்.



உதாரணத்துக்குக் "கோலங்கள்" நாட கத்தை எடுத்துக் கொள்வோம். அதன் கதையோட்டம் நடைமுறையில் இயல்பு க்கு மாறானதொன்று. நம்முடைய சாதாரண பெண்ணொருவரால், "கோலங்கள் அபி" யாகச் செயற்படுவது சாத்தியமில்லை. ஆனாலும் இன்று முற்போக்குச் சிந்தனையாளர்களாகவும், புத்தி ஜீவிகளாகவும் இனங்காணப் படுவோர் கூட, "கோலங்களை" மலைப் போடு ரசித்து வியப்போடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

அபிக்கு ஒரு கஸ்டமென்றால் நமது சின்னத்திரைப் பார்வையாளினிகள் இரக சியமாகக் கண் கலங்கித் துப்பட்டாவால் துடைத்தும் கொள்கிறார்கள்.

திரையில் மாமியாரை விரட்டி விரட்டி மருமகள் பாத்திரங்கள் பழி வாங்கு கையில்... ஒவ்வொரு சின்னத்திரை பார் வையாளினியும் (குறிப்பாகத் திரும திகள்) கடைவாய்க்குள் புன்னகைத்துக் குரூரமாய் திருப்திப்பட்டுக் கொள்கி றார்கள்.

இப்படித் தம்மால் முடியாததைத் தனது ஆற்றாமையை வெளிப்படுத்தத் தயங்குகின்ற ஒவ்வொரு ரசிகையும் ஒவ் வொரு நாடகத்தின் புரட்சிப் பாத்திரப் படிமத்தினூடாகவும் தன்னை ஆசுவாசப் படுத்தி வக்கிரமாகத் திருப்தியுற்றுக் கொள்கிறான்.

ஆனால் இதற்காக அவன்கொடும்கும் விலையே மிக அதிகம்! (இதுபற்றி வேறொரு கட்டுரையில் விரிவாகப் பேசுகிறேன்).

இந்த மெகாசீரியல்களில் காட்டப்ப டுகின்ற அனைத்தும் அபத்தமானவை! வில்லியாக ஒருத்திவருவாள் மறக்காமல் ஒரு கையடக்கத் தொலைபேசியை (இடம், பொருள், ஏவல் எதுவமற்று) சுமந்திருப்பாள். மடமடக்கும் புடவை கலையாத பூ பொட்டு அலங்காரம் - இத்யாதிகளுடன் குறுக்கும் நெடுக்கு மாய் ஒரு "சிங்கி" (ஆண்சிங்கத்துக்கான பெண்பாலோ!) நடைவேறு! இது சின்னத்திரை வில்லிகளுக்கான இலட்ச ணங்கள். மாமியார் என்றொரு பெண் வருவார் மருமக்களுக்குத் தங்கையோ எனத் (இளமையில்) திகைக்வைப்பார்! இவ்வாறு நிறைய...!

இப்படி, இந்த நாடகங்கள் நிகழ்த்து கின்ற கேலிக்கூத்துக்களை வாய்பிளந்து - சீரியஸ் தனத்தோடு இரசிக்கும் நமது பெண்களின் ஒட்டறைபடிந்த ரசனைப் புத்தியையும் நமது சினிமா நுகர்வோரி னது "மலின ரசனை" களையும் நீள் தொடர் எழுத்துக்கள் வழியாகச் "சலவை" செய்யவேண்டிய பொறுப்பு நமது அச்சு ஊடகங்களுக்கு உள்ளதாய் உணர்கிறேன். அதற்கானதோர் ஆரோக் கிய ஆரம்பமாக இதைக் கொள்வோம்.

# வியூகம் மாத சஞ்சிகை

பெயர் (திரு/திருமதி/செல்வி) :..............................................................

முகவரி :..............................................................

..............................................................

தொலைபேசி :..............................  தொலை நகல் :..............................

மின்னஞ்சல் :..............................  பிறந்த திகதி :..............................

| சந்தா விபரம் | |
|---|---|
| இலங்கை | Rs. 720 |
| இங்கிலாந்து | £ 12.00 |
| கனடா | $ 15.00 |
| சுவிஸ் | SFr. 24.00 |
| ஐரோப்பிய நாடுகள் | $ 15.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | $ 15.00 |

ஆம் வியூகம் மாத சஞ்சிகையின் சந்தாதாரராக என்னையும் இணைத்துக் கொண்டு வியூகம் சஞ்சிகையை மாதாந்தம் எனது முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கையொப்பம்:.....................  திகதி :.....................

Bethelhem
Switerland
079 208 5046




**Viyukam Registered as a Magazine in Sri Lanka.**

**P. O. Box 1364 Colombo**